# மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

## த மி ழ க ம் செ ழி க் க
## 1000 கோ டி போ தா து !

## நா ம் வா ழ
## 2000 கோ டி வே ண் டு ம் !

### நம்ம நிதி அமைச்சருக்கு

### முகம் கருக்குது, மூஞ்சு சுளுக்குது,

### உடல் வெளுக்குது, உள்ளம் பதறுது,

## தலை தொங்குது !

### ஐயோ பரிதாபம்! மேதையை நினைத்தால் மெத்த பரிதாபம் !

நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் கொஞ்சம் ஆத்திரக்காரர்! அதனால் மனிதனுக்கு எது முக்கியமோ, அது சில சமயங்களில் அவருக்கு மட்டாகி விடுகிறது!

கனம் சுப்பிரமணியம் வயதில் கொஞ்சம் இளைஞர்! பொதுவாகவே இளமைப் பருவம் எதைப்பற்றியுமே யோசிக்க முடியாத பருவமாகும்!

எல்லா அமைச்சர்களையும் காட்டிலும் கனம் சுப்பிரமணியம் சிலவற்றில் சிறப்புடையவர் என்றே சொல்ல வேண்டும்! உருவத்திலும், தோற்றத்திலும்கூட அப்படித்தான்!

சிகப்பும், கருப்பும் இல்லாதவர் – இரண்டுக்கும் இடையே உள்ளவர்! சற்று உயரமானவர்! கண்ணாடி அணிந்த காரணத்தாலோ என்னவோ பார்வையிலே கொஞ்சம் பெருமிதம் கூட உண்டு! அறியாதவர்கள் சிலர் அந்தப் பார்வையை கர்வப் பார்வை என்று கூடச் சொல்வார்கள்! இத்தனை உருவச் சிறப்புகளும் சேர்ந்து அவருக்கு தனியான குணத்தையே தந்து விட்டன!

நீங்கள், கனம் சுப்பிரமணியம் அவர்களை மேடையிலே பார்த்திருப்பீர்கள் என்றே நினைக்கிறோம்! அவர் பேசுவதற்கும், மற்ற அமைச்சர்கள் பேசுவதற்கும் பெருத்த வித்தியாசம் உண்டு! நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் வழக்கறிஞர். வாதாடும் திறமைப் பெற்றவர் என்ற காரணத்தால் இதைக் கூறவில்லை!



காமராஜர் முதல், கக்கன் வரை எல்லா அமைச்சர்களும் மேடையில்

(12ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 — 26-6-60 — ஒலி 34

# கீர்த்தி வாய்ந்த போலீஸ் கடமையைச் செய்யுமா?

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எல்லா போலீஸ் அதிகாரிகளைக் காட்டிலும், தமிழகத்திலுள்ள போலீஸ் அதிகாரிகள் தான் மிக்க திறமை வாய்ந்தவர்கள்! பெருமை தரும் பணிகளையும் புரிந்தவர்கள்!

ஆற்றலிலும் சரி, அஞ்சா நெஞ்சத்திலும் சரி, பணியாற்றும் திறமையிலும் சரி இவர்களுக்கு ஈடு வேறு எங்குமே இல்லை—இவர்களுக்கு இணை வேறு யாருமே கிடையாது!

இந்த மாநிலத்தைத் தாண்டி வேறு எங்கு சென்றாலும்—திரு பாலகிருஷ்ண ஷெட்டியைப் போல் ஒரு இளைஞரை, ஒரு திறமையாளரை காணவே முடியாது! அதே போல் தோற்றத்திலும் சரி, மன உறுதியிலும் சரி, நிர்வாகத் திறமையிலும் சரி திரு. மகாதேவனைப் போல் ஒருவரை காணவே முடியாது! அதே போல் தான் திரு. குழந்தை வேலுவுக்கு ஈடு, மற்ற மற்ற அதிகாரிகளுக்கு இணை எங்குமே கிடையாது!

போலீஸ் உயர்தர அதிகாரிகளுக்கு மட்டுமல்ல இந்தச் சிறப்பு—நடுத்தர அதிகாரிகளுக்கும் கீழ்த்தர அதிகாரிகளுக்கும்—சாதாரண போலீஸ் சிப்பாய்களுக்கும் இந்த பெரும் சிறப்புண்டு!

இப்படிப்பட்ட சக்தி வாய்ந்த போலீஸ் படை இருந்தும், சென்னையில் காலித்தனங்கள் மலிந்திருக்கக் காரணமென்ன? உண்மையிலேயே நமக்கு இது புரியவில்லை!

துணிந்து தாக்கப்படுகிறது, துணிந்து வெறியாட்டம் ஆடப்படுகிறது! ஏன்? நிலைமை என்ன? உண்மையிலேயே நமக்கு உள்ள உண்மை நிலை புரியவில்லை!

ரௌடிகளாக இருந்தால அடக்கப்பட்டிருக்கும்—அதில் துளியும் சந்தேகமில்லை! காலிகளாக இருந்தால், கள்ளர்களாக இருந்தால் ஒடுக்கப்பட்டிருக்கும் அதிலும் சந்தேகம் நிச்சயமாக இல்லை!

அரசியல் என்ற போர்வையில், அகிம்சை என்ற வேஷத்தில் துணிந்து கலகம் செய்யப்படுகிறது, துணிந்து கலாட்டா செய்யப்படுகிறது! எப்படி? ஏன்?

இதை அடக்க போலீஸ் அதிகாரிகளுக்கு சக்தியில்லையா? அப்படியும் சொல்லிவிட முடியாது! பின்பு உண்மை நிலை தான் என்ன?

"போலீஸ் அதிகாரிகளுடைய கைகள் கட்டப்படுகிறது, போலீஸ் அதிகாரிகளுடைய திறமை சோதிக்கப்படுகிறது, போலீஸ் அதிகாரிகளுடைய வீரம் மறைக்கப்படுகிறது—ஆம், போலீஸ் நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிடுகிறது" என்ற எண்ணம் தான் நமக்கு உண்டாகிறது!

சென்னை—புரசை, குளப்பகுதிகளில் காங்கிரஸ் குண்டர்கள் வெறியாட்டம் ஆடி இருக்கின்றனர்!

கழகக கட்டிடங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன, எங்கள தலைவர்களுடைய படங்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன, எங்கள கழகத் தோழர்களில் சிலரை கத்தியால் குத்தி இருக்கின்றனர்! பொருள்களுக்கு பெரும் நட்டத்தை உண்டாக்கி இருக்கின்றன!

"சென்னையில் நடைபெற்றிருக்கிற இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தால்—இங்கே ஆட்சி நடைபெறுகிறதா என்ற சந்தேகம் கூட உண்டாகி இருக்கிறது!

நாடு இருக்கிறதா? நாட்டு மக்கள் இருக்கிறார்களா? நாட்டையும், நாட்டு மக்களையும் ஆள ஒரு அரசாங்கம் இருக்கிறதா? அதற்கென அமைச்சர்கள் இருக்கிறார்களா? என்ற சந்தேகம் பலமாக ஏற்பட்டு விட்டது!

வலுத்தவர்கள். இனி இளைத்தவர்களை சாப்பிட வேண்டியது தானா? இனி ரௌடிகளுக்கும், காலிகளுக்கும் தான் இந்த நாட்டில் இடம் உண்டா? இதை விரைவாக முடிவு செய்ய வேண்டும், இந்த அரசாங்கம்!

காங்கிரஸ் காரர்களைத் தவிர, மற்ற எந்த கட்சிக் காரர்களும் இந்த நாட்டில் வாழவே கூடாதா? ஆம்! என்றால் உண்மையை பகிரங்கமாகச் சொல்லிவிடட்டும், அப்படி இலலை என்றால் மற்றக் கட்சிக்காரர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது!

சென்னையில் காலித்தனங்கள் செய்தவர்கள் மீது ஏன் போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை!

கதர்ச்சட்டையைக் கண்டால் போலீஸ்காரர்கள் நடுங்க வேண்டிய நிலை பிறந்து விட்டதா!

காந்தி குல்லாக்களைக் கண்டால், போலீஸ்காரர்கள் பயந்து பதுங்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதா? இதற்கேன் இங்கு போலீஸ் படை? இதற்கேன் அவர்களுக்கு இலட்சக் கணக்கில் சம்பளம்!

போலீஸ் கடமைகளை செய்ய முடியவில்லை! கண்ணியத்தைக் காக்க முடியவில்லை! நாட்டிலே நடைபெறும் அட்டூழியங்களை ஒழிக்க முடியவில்லை!

இங்கே பெரும் போலீஸ் அதிகாரிகளுக்கு எதும் அதிகாரமில்லை! எதையும் செய்ய அவர்களால் முடிவதில்லை! போலீஸ் அதிகாரங்கள் முழுவதும் கதர் சட்டைக் காரர்களுடைய சட்டைப் பைகளுள் இருக்கின்றன! இந்த நிலையில் போலீஸ் ஏன்?

போலீஸ் படைகளை கலைத்து விட்டு, போலீஸ் அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்பி விட்டு—காங்கிரஸ் ரௌடிகளின் கையில், காங்கிரஸ் காலிகளின் கையில் போலீஸ் இலாக்காவை ஒப்புவித்து விடலாமே!

காலிதனத்திலேயே வளர்ந்து, ரௌடித்தனத்தையே நம்பி வாழும் காந்தி சீடர்கள் நம்மை ஒழிக்க தீவிரமான ரௌடிததனத்தில் இறங்கி விட்டார்கள்!

"ஆகஸ்டு காலித்தனம் வெற்றி பெற்று, ஆட்சியைக் கைப்பற்றி விட்டோம்" என்ற மமதையால் அகிம்சா மூர்த்திகள் இந்த திருவிளையாடலில் இறங்கி இருக்கின்றனர்!

ஆகஸ்டு காலித்தனம் வேறு, இந்தக் காலித்தனம் வேறு! இதை காந்தி சீடர்கள் உணரா விட்டால் நிச்சயமாக ஏமாற்றம் தான் அடைவார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆல் போல் வளர்ந்து விட்டது! மக்களுடைய செல்வாக்கையும் பெருமளவு பெற்று விட்டது! இந்த நிலையில் தேர்தலோ நெருங்கி, நெருங்கி வருகிறது! மக்கள் சக்தியை திரட்ட முடியாத காங்கிரஸ் குண்டர்கள் குண்டாந் தடியைத் தான் தூக்குவார்கள்!

தேர்தல் நெருங்க, நெருங்க இந்த குண்டர்களுடைய காலித்தனமும் வலுக்கத் தான் செய்யும்!

குண்டர்களுடைய கரங்கள் ஓங்கினால், அவர்களுடைய ஆட்சி நடைபெறத் தொடங்கினால் நாட்டின் நிலை எதுவாக இருக்கும்!

குண்டரிசம் ஒரு சாராருக்கு மட்டுமே சொந்தமல்ல! பண்பையும், நாகரீகத்தையும் தூக்கி சாக்கடையில் எறிந்து விட்டால் எல்லோருமே குண்டர்கள் தான்! அந்த நிலை வருமானால் நாட்டின் நிலை என்ன?

அமைச்சர்கள் இதை உணர்ந்து பார்க்க வேண்டும்!

நாட்டின் அமைதியைக் காக்க போலீஸ்காரர்களுக்கு பரிபூரண அதிகாரம் அளிக்க வேண்டும்! கட்சி வித்தியாசமின்றி, எல்லோரையும் ஒன்றாக பாவித்து, நடவடிக்கை எடுக்க போலீஸ்காரர்களுக்கு பரிபூரண உரிமையளிக்க வேண்டும்!

ஒரு நான்கு ரூபாய்க்கு கதா வேட்டியும், ஒரு பத்து ரூபாய்க்கு கதர் சட்டையும், ஒரு இரண்டு ரூபாய்க்கு கதர் குல்லாவையும் அணிந்து கொண்டு விட்டால் போதும், அவன் கன்னக்கோல் தூக்கும் கயவனாக இருந்தாலும் போலீஸ் அதிகாரிகள் நெருங்க முடிவதில்லை! இந்த நிலையை உடனே போக்க வேண்டும்!

போலீஸ்காரர்களும் தங்கள் கடமையை நிறைவேற்ற கண்ணியம் காக்க முன் வர வேண்டும்! இதற்கு தடை ஏதும் இருக்குமானால் அமைச்சர்களோடு வாதாடி அந்த உரிமையைப் பெற வேண்டும்! அப்படி பெற முடியா விட்டால் நாட்டில் அமைதி நிலவாது, அக்கிரமங்கள் ஒழியாது! இவைகள் ஒழியா விட்டால் உங்களுடைய பேரும், புகழும், கீர்த்தியும், செல்வாக்கும், ஆற்றலும், திறமையும் நிச்சயமாக மறைந்து விடும்!

தேர்தல் நெருங்குகிறது! நிலைமை மோசமாகும் முன்பு இதற்கோர் நல்ல முடிவேற்பட வேண்டும்!

# அரசியல் பேடிகளை இழுத்து வந்து பாடம் கற்பிப்போம் !

## வாரீர் ! விரைந்து வாரீர் !

## பெண்டு, பிள்ளைகளை—உற்றார் உறவினர்களை கொஞ்ச நாளைக்கு மறந்தே விடுங்கள் !

### நமக்கு சோற்றுச் சுவையும் வேண்டாம்!

### நமக்கு விடுதலை தான் வேண்டும் !

### சுகபோகங்களும் வேண்டாம் !

### நாட்டுக்கு வாழ்வுதான் வேண்டும் !



## சென்னையில் சம்பத் இடி முழக்கம் !

சென்னை திருவல்லிக்கேணி 75வது வட்டம் டாக்டர் தருமாம்பாள் நினைவுமன்ற துவக்க விழா 21-6-60ம் நாள் மாலை செங்கல்வராய முதலி தெருவில் திரு. இராசாராம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நகரமன்ற உறுப்பினர் அலமேலு அப்பாதுரை அம்மையார், தோழர் நீல நாராயணன் ஆகியோர் பேசிய பின் இந்தி எதிர்ப்புப் போர்க் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் பலத்த கை ஒலிகளுக்கிடையே பேசியதாவது ;—

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே!!

இன்றைய தினம் மறைந்த வீராங்கனை டாக்டர் தருமாம்பாள் பெயரால் நினைவு மன்ற துவக்க விழா ஏற்பாடு செய்து, அதில் நான் கலந்து உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நான் மிக மிக மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று இங்கு மிக நெருக்கடியான நிலையில் டாக்டர் தருமாம்பாள் விழா கொண்டாடப்படுகிறது. டாக்டர் தருமாம்பாளை முதன் முதல் நீங்களெல்லாம் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்ததே தமிழ் மொழியை அழித்து இந்தி மொழி ஆதிக்கம் செலுத்த நாட்டில் முயற்சித்த போது அதை எதிர்த்துப் போராடி சிறப்பான முறையில் தொண்டாற்றிய பெருமையால் தான்! மீண்டும் இந்த நாட்டில் இந்தி கட்டாயமாக கொண்டு வரப்படுகிறது. மொழி வெறியும் ஆதிக்க வெறியும் கொண்டு இந்தி வெறியர்கள் தமிழ் நாட்டை அடிமையாக்கஎண்ணி ஆணவமாக, உறுதியோடு இந்தியைக் கொண்டு வர முடிவு செய்து விட்டார்கள்.

நம்முடைய கழகத்தின் பொதுக்குழு நேற்றையமுன் தினமும், அதற்கு முன் தினமும் குமாரபாளையத்தில் கூடி, மக்களெல்லாம் ஆவலோடு எதிர் பார்த்தபடி—அவர்கள் ஏமாற்றம் அடையாதபடி. மக்கள் யாவரும் மகிழ்ச்சியடையும் வண்ணம் இந்தியை எதிர்த்து அதை அழிப்பதற்கான போராட்டத்தை நடத்துவதற்கான அருமையான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. அதை நீங்களெல்லாம் பத்திரிகைகளில் கண்ணுற்றிருப்பீர்கள். இருப்பினும் போராட்டக் குழுவின் தலைவன் என்ற முறையில் அதை உங்கள் முன் படித்துக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். அதை நீங்கள் சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (தோழர் சம்பத் பொதுக் குழுவில் நிறை வேற்றப்பட்ட போராட்ட தீர்மானத்தை படித்துக் காண்பித்தார்).

இந்த தீர்மானம் அவசரபட்டோ, ஆத்திரப்பட்டோ நிறைவேற்றப்பட்டதல்ல, நீண்ட நாட்களாக கண்ணியமாகவும், நீதியோடும், நேர்மையோடும் உள்ளக் குமுறலோடும் எடுத்துக் கூறிவந்தும், அதனால் எந்த வித பயனும் ஏற்படாதென்று தெரிந்து இனி காத்திருப்பதில் பயனில்லை, நம்முடைய கடமையை நாம் செய்தே தீர வேண்டும், அரசினர் "நம்மை வளைந்து கொடுப்பவர்கள். வாயால் பேசிக் கொண்டிருப்பவர்கள்" என்ற மமதையால் நம்மை அலட்சியப்படுத்தி வருவது தெரிந்தே இந்த தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

இந்த தீர்மானம் எவரையும் பயமுறுத்தும் தீர்மானமல்ல— மிரட்டுகின்ற தீர்மானமல்ல; ஏட்டிலே எழுதப்பட்ட வெறும் தீர்மானமுமல்ல, உள்ளத்திலே உதித்த கொந்தளிப்பால் ஆர்வத்தால் உணர்ச்சியால் உந்தப்பட்ட தீர்மானமே யாகும். ஆகஸ்டு மாதம் 30ந் தேதி வரை நம்மை அடிமைப்படுத்தியும் இழிவுப்படுத்தியும் வரும் ஆணவத்தருக்கர்களுக்கு—அதிகார வெறி பிடித்த எதேச்சாதிகார மமதையாளர்களுக்கு இடையில் சில நாள் தவணை கொடுத்திருக்கிறோம்.

அதற்குள் டில்லி அதிகார வெறியர்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும்! இந்திய குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் இந்தியைப் பற்றி ஒரு தெளிவான பதிலை கொடுத்து விட வேண்டும்!

இந்தி பேசாத-இந்தியைத் தெரியாத மாநில மக்களின் மீது வலுக்கட்டாயமாக திணிப்பதில்லை. அவர்களின் அப்பிராயத்தை—அவர்களின் எண்ணத்தை அறிந்தே ஒரு முடிவுக்கு வருவோம் என்று திட்ட வட்டமாகக் கூறிவிட வேண்டும்.

அப்படிக் கூறிவிட்டால் இனி தென்னக மக்கள் வாளாக இருக்க மாட்டார்கள்.

ஆகஸ்டு 30ம் தேதிக்குப் பின் பொதுக் குழுவின் தீர்மானப்படி தென்னக மக்களின் ஏகோபித்த எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக ஒரு மாபெரும் கண்டனக் கூட்டம் நடைபெறும், ஆர்பாட்டங்கள் நடைபெறும், ஊர்வலம் நடைபெறும். அரசினர் இதற்செல்லாம் தடை விதித்தால் மீறி அவைகளைச் செய்யப்படும்.

நம்முடைய பொதுக்குழு இந்தப் போராட்டத்தைச் சிறப்புற நடத்துவதற்காக பதினேழுபேர் களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்திருக்கிறது.

அந்தக் குழுவின் தலைமையை ஏற்று நடத்தும் பெருமையையும் எனக்களித்திருக்கிறது.

(4ம் பக்கம் பார்க்க)

# துப்பாக்கிகளை முறைத்து, முறைத்துப் பாருங்கள் ! அது, துவண்டு. ஒடிந்து விழுந்து விடும் !

(சம்பத் பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகஸ்டு 30ம் தேதிக்குப் பின் கண்டன ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும். ஆர்ப்பாட்டங்களும் நடத்துவது நமது போராட்டத்தின் ஆரம்பக் கட்டந்தான். முடிவு எப்படி, எப்படி இருக்கும் எந்தெந்த முறையில் போகும் என்பதை இப்போது நம்மால் கூற முடியாது. அதிகார வர்க்கத்தினரின் போக்கை வைத்தே—அவர்கள் கையாளும் முறைகளைப் பார்த்தே அதற்கேற்ற முறையில் குழு நடவடிக்கை எடுக்கும்.

இன்று தென்னகத்து மக்கள் உள்ளம் கொதிப்படைந்திருக்கிறார்கள் அவர்கள் எரிமலையாகி வீரங் கொண்டு, போராட்டத்தைத்தவிரவேறு மார்க்கம்இல்லை என உணர்ந்து இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

செருக்கும், மமதையும். அதிகார வெறியும், மொழி வெறியும் கொண்டுள்ள டில்லி ஆட்சியாளருக்கு நேர்மையோடும், சாதாரண முறையிலும், நீதியோடும், கண்ணியத்தோடும் கேட்டு தீர்மானத்தை அனுப்பினால் அவர்கள் நம்மை மதிக்க மாட்டார்கள். நமது தீர்மானத்தைக் குப்பைத் தொட்டியில் போட்டு விடுவார்கள். அவர்கள் நம்மைப் பற்றி கேவலமாகவே, அலட்சியமாகவே எண்ணி, நாம் அடிமைகள் நாம் எதையும் எதிர்க்க மாட்டோம் என்று எண்ணி இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட மண்டை கர்வம். பிடித்தவர்களுக்கு, அதிகார மமதையாளர்களுக்கு நாம் பாடம் கற்பிக்க, நாம் கோழைகளல்ல-குனிந்து கொடுக்கும் கோமாளிகளல்ல, நமக்கும் வீரம் உண்டு, சுயமரியாதை உண்டு நமக்கும் நமது உரிமையைப் பெற வழி தெரியும் என்பதைக் காட்ட அவர்கள் திமிர் பிடித்த போக்கிற்கு எடுத்துரைக்க, தென்னக மக்களின் சக்திகளை செயலில் காட்ட, இழந்த உரிமையைப் பெறவே இந்தப் போராட்டம் நடைபெறுகிறது,

வாயாலும், கெஞ்சலாலும், நீதியாலும்,நேர்மையாலும் கேட்டால் அந்தக் கெடு மதியாளர்கள் வழிக்கு வரமாட்டார்கள். போராட்டம் ஒன்றினால் தான் அவர்கள் வழிக்கு வருவார்கள். அதற்கும் தென்னகத்து மக்கள் தயாராகி விட்டார்கள். தங்கள் முடிவான முடிவை குமாரபாளையத்தில் செய்து விட்டார்கள்.

இனி தென்னகத்த விடுதலை உணர்ச்சி பெற்ற மக்கள் ஓய்ந்திருக்க மாட்டார்கள். மனவுறுதியோடு யாவரும் ஒன்றுபட்டு குமுறிக் கொண்டிருக்கிறார்கள். தங்களது மொழிக்கு—நாட்டிற்கு நாட்டு மக்களுக்கு இழிவையும், அவமானத்தையும் செய்துவரும் ஈனர்களுக்கு நற்புத்தி புகட்ட வீறு கொண்டெழுந்து விட்டார்கள்.

நமது அண்ணா அவர்களும் மிக அருமையாகக் கூறினார்கள் "இந்த சந்தர்ப்பம் நல்ல சந்தர்ப்பம். இந்த நேரத்தை நாம் பயன்படுத்தியே ஆக வேண்டும் இப்போது நாம் வாளாக இருந்து விட்டால் நாம் என்றும் விடுதலை அடைய முடியாது! எல்லோரும் போராட்டத்திற்கு தயாராகுங்கள் யாரும் ஓய்ந்திருக்கக் கூடாது" என்று கேட்டிருக்கிறார்.

நாம் தீர்மானம் செய்து விட்டதால்—அவர்களுக்கு அனுப்பி விட்டதால் எதிர்க்கிறோம்என்று கூறிவிடுவதால் அவர்கள் பணிந்து விடுவார்கள் என்று நீங்கள் எண்ண வேண்டாம். நாம் கூறுவதெல்லாம் செவிடன் காதில் ஊதும் சங்கு போன்றுதான் அவர்களுக்கு இருக்கும்.

நாம் எதற்கும் தயாராக இருக்க வேண்டும், இனி சோம்பலாகவோ, மந்தமாகவோ, நாம் இருக்கக் கூடாது. நமக்கு நாள் குறைவாக தான் இருக்கிறது. ஆகவே சர்க்காரைப் பணிய வைக்கும் முறையில் நாம் காரியத்திலீடுபட வேண்டும் நெஞ்சை காட்டி வீர உணர்ச்சியோடு "வாழ்வதா? மாள்வதா" என்ற முடிவோடு புறப்பட வேண்டும் நம்முடைய வீரத்தையும், போராடும் திறமையையும் அவர்கள் காணும்படி செய்தே ஆகவேண்டும்

இந்தப் போராட்டம் மிக பயங்கரமான போராட்டமாக இருக்கும். இது வெறும் மொழிப் போராட்டமாக மட்டும் இராது. நாட்டை விடுவிக்கும் சுதந்திரப் போராட்டமாக இருக்கும்.

நாம் இந்த முடிவை விளையாட்டான முறையில் எடுக்கவில்லை. சிந்தித்தே—சீர் தூக்கியே, விளைவை உணர்ந்தே இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்.

இதனால் என்னென்ன ஆபத்துக்கள். பயங்கரமான விளைவுகள் ஏற்படும், எத்தனை பேர்கள் பலியாக நேரிடும் என்னென்ன அக்கிரமங்கள் அடக்குமுறைகள் நடைபெறும்என்பதை நாம் அறிவோம்அதற்கெல்லாம் நாம் பயந்து விடக்கூடாது.

இந்த சந்ததியார்களாகிய நாம் அழிந்தாலும், ஒழிந்தாலும் சரி பின் சந்ததியார்கள் உரிமையுடன் வாழ்வதற்காக நாம் நம்மை அர்ப்பணிப்போம்.

நாம் இப்போது விட்டுக் கொடுத்து விட்டால், அவர்கள் வெறிக்கு அடிமையாகிவிட்டால எந்தத தலைமுறையிலும் நாம் விடுதலை பெற முடியாது, நம்முடைய பின் தலைமுறையார் சுயமரியாதையுடனும் விடுதலையுடனும் வாழ்வதற்காக அதிகார, ஆதிக்க — ஏகாதிபத்திய வெறிபிடித்தோரின் ஆதிக்கத்தை முறியடித்து-செருக்குப் பிடித்தலையும் வடநாட்டு வெறியர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க உடனே தயாராகுங்கள்.

காலஞ்சென்ற டாக்டர் தர்மாம்பாள் உயிரோடு இருந்திருந்தால் இன்று மிக மகிழ்ச்சியோடு மேடைக்கு வந்திருப்பார்கள். நோய்வாய்ப் பட்டிருந்தாலும் படுக்கையில் படுத்திருந்தாலும் வீர உணர்ச்சியோடு இங்கு வந்து, தாய்மார்களுக்கு வழி காட்டி அவர்களுக்கெல்லாம் விடுதலை உணர்ச்சியை ஊட்டி இந்த உரிமைப் போராட்டத்தில் பங்கு கொள்ளச் செய்வார்கள். அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தார்கள்.

அந்தப் பணியைச் செய்ய நமது அலமேலு அப்பாதுரை அம்மையாரும், சத்தியவாணி முத்து அம்மையாரும் இருக்கிறார்கள், அவர்கள் தாய்மார்களை பட்டாளத்தை போர்படையில் சேர்க்க அவர்கள் முனைவார்கள்!

சென்னையிலுள்ளவர்களை நான் ஒன்று மட்டும் கேட்டுக் கொள்வேன். ஆண்கள் ஆயிரம் பேர்கள் போராட்டத்தில் குதி தால் பெண்களும் அந்த அளவு தயாராக வேண்டும்!

நான் குமாரபாளையத்தில் ஒரு அதிசயத்தைக் கண்டேன். மிகவும் பிரமித்துப் போனேன். அந்த சின்னஞ்சிறு கிராமத்தில் ஒரு பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது. யாருமே எதிர்பாராத முறையில் நமது அண்ணா அவர்களே அதிசயிக்கும் வகையில் இலட்சக்கணக்கான மக்கள் அந்தக் கூட்டத்தில் கூடி இருந்தார்கள் மக்கள் வெள்ளமே திரண்டிருந்தது. அதில் பெருமைப்படும்படியான விசேடமாகக் கருதும்படியான ஒரே ஒரு காரியம் என்ன வென்றால் 15 ஆயிரம் பெண்கள் அந்தக் கூட்டத்தில் பங்கு கொண்டார்கள்.

நமது அண்ணா அவர்கள் கடைசியாகப்பேசினார்கள், போராட்டத்தின் தன்மைகளையும், மக்கள் காட்ட வேண்டியசெயல்களையும் கூறி விட்டு இங்கு கூடி இருப்போர்களில் எத்தனை பேர்கள் போராட்டத்தில் பங்குக் கொள்ளப் போகிறீர்கள். அதை கரம் உயர்த்திக் காட்டுங்கள் என்று வீரத்தோடும், ஆவேசத்தோடும் கேட்டார்.

உடனே கூடியிருந்தோர்களெல்லாம் கரம் உயர்த்தினார்கள். எந்தக் கூட்டங்களிலும் ஆண்கள் தான் கரங்களை உயர்த்துவது வழக்கம். ஆனால் குமாரபாளையம் கூட்டத்தில் கூடியிருந்த தாய்மாரகளெல்லாம் கரங்களை உயர்க்தி தாங்களும் போராட்டத்தில் கலந்து கொள்ளுவதாக உறுதி அளித்து முழக்கமிட்டார்கள். அவர்கள் "நாங்களும் தயார்" என்று கூறிய போது எங்களுக்கெல்லாம் அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இந்த உணர்ச்சி எப்படி வந்தது. யாருடைய தூண்டுதலாலோ. யாருடைய போதனையாலோ வந்ததல்ல.

தமிழகத்து மக்களை பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சொரணையற்றவர்கள்—சூடற்றவர்கள் — மானமற்றவர்கள் அவர்களுக்கிருந்த வீரம் மங்கி விட்டது அவர்கள் அடிமை உணர்ச்சி கொண் வர்கள் என்று அந்த எண்ணத்தை—போக்கை நீக்கவே குமாரபாளையம் போராட்ட முடிவுக்கு வந்திருக்கிறது

தென்னகத்திலுள்ள மந்திரிகள் தங்கள் பதவி மோகத்தால் காட்டிக கொடுக்கவும் வட

(9ம் பக்கம் பார்க்க)

---

## நான் தமிழனல்ல

## காமராஜ் !

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல், "கோழையாக இருப்பவர்கள் வீரத்தை விலைக்கு விற்று விட்டவர்கள் போராட்டத்திலே ஈடுபட வேண்டாம, கதவைத் தாளிட்டுக் கொண்டு, திருக்குறளையும், சிலப்பதிகாரத்தையும் கொளுத்தி விட்டு நான் தமிழனல்ல—காமராஜ்! நான் தமிழனல்ல—கக்கன்! நான் தமிழனல்ல சுப்ரமணியம்! நான் தமிழனல்ல வெங்கிட்டராமன் என்று சொல்லிவிடுங்கள்! அதுவே நீங்கள் போராட்டத்திற்குச் செய்யும் பேருதவியாகும்!"

சென்னையில்: சம்பத்.

# குமாரபாளையம் முடிவை செயலாற்ற வாரீர்! வாரீர்!!

## இந்தப் போராட்டமே நமது இறுதிப் போராட்டம்!

## இந்தி "எத்தனை பட்டாளத்துடன், எப்பக்கம் புகினும் எதிர்த்தே தீர்வோம்!

# எத்தனை பிணங்கள் விழுந்தாலும்! இலட்சியத்தைக் கைவிடோம்!

### டி. கே. சீனுவாசன் போர் பரணி!

சென்னை 71வது வட்டம் எல்லீஸ்புரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பத்தாவது ஆண்டு விழா 17-6-60 நாள் நடைபெற்றது. திரு. வி. என். சுப்ரமணியம் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினர்.

தமிழ் வளர்ச்சிமன்ற செயலாளர் பி.கே, கோவிந்தன், ராஜு நகரமன்ற உறுப்பினர் ஆர் கிருட்டிணமூர்த்தி, ராசேந்திரன் நகரமன்ற உறுப்பினர் வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசிய பின் திரு டி.கே சினுவாசன் நேற்று, இன்று, நாளை என்பதைப் பற்றி ஆற்றிய சொற்பொழிவு வருமாறு :—

★

அன்புள்ள தலைவர் அவர்களே. பெரியோர்களே. தாய்மார்களே. தோழர்களே.

இந்தப் பகுதி திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தி அதன் மூலம் உங்களை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த நண்பர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்லதயும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய தோழர்கள் காங்கிரஸ் காரர்களுடைய அக்ரமங்களையும் அட்டூழியங்களையும் பற்றி உங்கள் முன்னால் விளக்கமாகப் பேசினார்கள்.

முன்பு அந்தக் கட்சி ஒழுங்கான கட்சியாக இருந்தது என்றும், இப்போது தான் கொள்ளையடிப்பவர்களின் கூடாரமாக, கொலை செய்பவர்களின் சதிக் கூடாரமாக மாறி விட்டார்கள்.

இதே போன்று ஒரு மனப்பான்மை பொது மக்களிடத்தில் நிலவி வருகிறது. பழைய காங்கிரஸ் புதிய காங்கிரஸ் என்று பிரித்து, பழைய காங்கிரஸ் ஏதோ பத்தினித் தன்மையில் இருந்தது என்றும், புதிய காங்கிரஸ் தான் ஊழல் நிறைந்திருப்பதாகவும் பலர் நினைக்கிறார்கள். காங்கிரஸ் எப்போதுமே ஒழுங்காக இருந்ததில்லை. ஏன் அப்போது நடந்த அக்ரமங்கள் வெளிக்குத் தெரியவில்லை என்றால் அப்போது வெளியில் எடுத்துச் சொல்ல ஆட்கள் இல்லை. கோவிந்தராசன் இல்லை கிருஷ்ணமூர்த்தி இல்லை நெடுஞ்செழியன் இல்லை சம்பத் இல்லை

காங்கிரஸ் கட்சியை புகழ்ந்து பேசும் தினமணி இருந்தது. சுதேசமித்திரன் இருந்தது. பாரததேவி இருந்தது அக்ரமங்களை எடுத்துச் சொல்ல ஆள் இல்லாமல் புகழ்ந்து பேசுகிற ஏடுகளும் பேச்சாளர்களும் இருந்ததால் தான் காங்கிரஸ்காரர்களின் ஊழல்கள் வெளிக்குத் தெரியவில்லை.

இப்போது நாடே உணர்கிறது மூலைக்கு மூலை அவர்கள் செய்யும் அக்ரமங்களை பேச்சாளர்கள் பேசுகிறார்கள், அதனால் தான் காங்கிரஸ்கட்சி நாற்றமடிக்கிறது.

முன் திருமண வீடுகளில் கெட்டி மேளம் கொட்டுவார்கள் தாலி கட்டும் போது யாராவது தும்மினால் பல்லி கத்தினால் அபசகுனம் என்று நினைத்து அந்த ஓசைகளை மறைக்க கெட்டி மேளம் கொட்டுவது வழக்கம் அப்போது தினமணியும், சுதேசமித்திரனும் இர்தவும் பாரத தேவியும் கெட்டி மேளம் கொட்டி வந்தன. அதனால் தான் தும்மல் சத்தம் காதில் விழவில்லை. பல்லி எழுப்பிய ஓசை காதில் விழவில்லை. இப்போது மேளத்தின் ஓசையை விட தும்முவோர் தொகை அதிகமாகி விட்டதால் ஊழல் தெரிகிறது.

மயானத்தில் பிணத்தை எரிக்க எடுத்துச் செல்லுபவர்கள் அங்கு ஆளுக்கொரு சுருட்டு கொடுப்பார்கள். அதற்கு காரணம், பிணத்தின் நாற்றம் தெரியாமல் சுருட்டின் புகை தடுத்து விடும் என்பது தான். அதே போல தான் அந்தக் காலத்தில் சுருட்டு புகைந்து கொண்டிருந்தது. பிண வாடை வீசவில்லை. இப்போது சுருட்டு அணைந்து விட்டது. நாற்றம் நாசியைத் துளைக்கிறது.

காங்கிரசில் எப்போதுமே நல்லவர்கள் இருந்ததில்லை, காந்தி ஒருவர் தான் நல்லவராக இருந்தார். காந்தியின் நல்ல பண்பை காங்கிரஸ் பயன் படுத்தியதே தவிர காங்கிரஸ்கட்சியின் புனித தன்மை எவரையும் அதன்பால் இழுக்கவில்லை, காந்தி நல்லவர் அதனால் காங்கிரசில் சேருங்கள் என்றார்கள் அப்பேர்பட்ட நல்லவரான காந்தியையே காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தின் முதலமைச்சர் ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு காந்தியார் கொள்கைக்கு விரோதமாக சுயராஜ்யாகட்சி என்று ஒரு தனிக் கட்சி ஏற்படுத்தினார். இறுதியில் காந்தியாரே அவரிடம் சரணடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. நல்லவரான காந்தியார் அக்கிரமக்காரர்களான அந்தத் தீயவர்களின் கொடுஞ் செயல்களைத் தாக்குப் பிடிக்க முடியாது தவித்தார்.

1942ம் ஆண்டில் நடந்த ஆகஸ்டு போராட்டத்தில் காந்தியாருக்கு எதிராக அவரது சீடகோடிகள் அவரது ஆணையை மீறி பல பலாத்காரச் செயல்களில் நடந்தார்கள். அஹிம்சை பாதை வழியில் போராட்டம் நடத்த வேண்டுமென்று காந்தியார் நினைத்தார். அதை மீறி பலாத்கார செயல்களுக்கு வழிகோலினர். மற்றவர்கள். அப்போது தண்டவாளத்தை பெயர்த்ததும், தபாலாபீசை கொளுத்தியதும், தந்திக்கம்பியை அறுத்ததும் காங்கிரஸ்காரர்கள் முன் கூட்டியே திட்டமிட்டுச் செய்த காரியங்களே தவிர திடீரென உருவான செயல்களல்ல.

அரசாங்கம் அடக்கு முறைகளைச்செய்து காங்கிரஸ் தலைவர்களைச் சிறைக்கு அனுப்பி விட்டால் நாடெங்கும் கலவரங்களும் குழப்பங்களும் பலாத்காரச் செயல்களும் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்தார்கள். காலித்தனம் காங்கிரசில் இப்போது ஏற்பட்டுவிட்டதாக எண்ண வேண்டாம். அது முன்பிருந்தே இருந்து வந்திருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. காலம் சென்ற மௌலானா அபுல் காலம் ஆசாத் (India wins freedom) "இந்தியா உரிமைப் பெறுகிறது" என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார். இதனால் தான் சுருட்டு புகை பிணத்தின் நாற்றத்தை மறைத்த வந்தது என்று குறிப்பிட்டேன். இப்போது சுருட்டு அணைந்து விட்டது. நாற்றமடிக்கிறது.

காங்கிரசில் நல்லவர்கள் தான் இல்லை என்றால், வல்லவர்களாவது இருந்தார்களா என்றால் அதுவுமில்லை, இந்திய அரசியல் சட்டத்தை எழுதுவதற்கு காங்கிரஸ் கட்சிக்குள்ளே தகுதி படைத்தவர்கள் கிடைக்கவில்லை. வெளியிலிருந்து ஆட்கள் பிடித்து வந்து 'அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டி

(8-ம் பக்கம்பார்க்க)

## 10

### கொக்கரக்கோ கொக்கரக்கோ

மின்சார விசிறி மெதுவாக சுழன்று மெல்லிய பூங்காற்றை வீசிக் கொண்டிருந்தது! ஸ்பிரிங்க் கட்டில், அதற்கேற்ற பட்டு மெத்தை, பக்கத்திலே புகைந்துக் கொண்டிருந்த "கம், கம்" ஊது பத்தியின் வாசனை—உறக்க மயக்கத்திற்குச் சாதகமான இத்தனையுமிருந்தும் சற்குணு புறண்டு, புறண்டு தான் படுத்துக் கொண்டிருந்தாள்!

திடீரென்று எழுந்து விளக்கைப் போட்டாள்! அடுத்த நிமிடமே விளக்கை அணைத்து விட்டு படுக்கையில் படுத்துக் கொண்டாள்! மீண்டும் எழுந்தாள் விளக்கை போட்டாள், மீண்டும் அணைத்தாள்! ஒரு பத்து நிமிடம் வரையில் ஏதோ பெரும் சிந்தனையில் ஆழ்ந்துக் கிடந்து விட்டு ஒரு பெரு மூச்சுடன் எழுந்து மங்கலாக, ஆனல் மனதுக்கு ரம்மிய மூட்டும் பச்சை கலர் விளக்கைபோட்டாள். கண்ணுக்கு விருந்தளிக்கும் பச்சைக் கலர் விளக்கு அவளுக்கு ஆயிரமாயிர இன்ப எண்ணங்களை தூண்டி விட்டது!

பக்கத்திலிருந்த தந்த யானைக் குட்டியை எடுத்து, கையில் வைத்துக் கொண்டு கொஞ்ச நேரம் ரசித்துக் கொண்டிருந்தாள்! அதற்குப் பக்கத்திலே இருந்த புத்தர் சிலையை நோக்கினுள்—"உலகே மாயம், உலகே மாயம்" என்று கொஞ்ச நேரம் இவ்வுலகை விட்டே அகன்றுள்! அதற்குப் பக்கத்திலே இருந்த பசும் பொன்னல் வார்த்த—ராதா ருக்மணி சமேதராய் வீற்றிருந்த கண்ணன் சிலையை கையில் எடுத்தாள்!" வாழ்க்கை என்றால் இதுவல்லவா வாழ்க்கை, நாமும் வாழ்கிறேமே" என்று ஒரு பெரு மூச்செறிந்தாள்! அவளுடைய மனம் என்னவோ போலிருந்தது! அந்த மங்கலான விளக்கையும் அணைத்தாள்! மனதை எங்கேயோ அலை பாய விட்டு விட்டு தவித்துக் கொண்டிருந்தால் எப்படித்தான் உறக்கம் வரும்?

காற்றால் புடைத்து சளிப்புற்றிருந்த சாரளத் திரையை கொஞ்சம் நீக்கினுள்! உலகத்தில் எவரும் காணுத அதிசயத்தை அப்படி இவள் என்ன கண்டு விட்டாள்!

வானம் பார்த்த சீமையிலே வாடிக் கிடந்த முல்லைக் கொடிக்கு வளம் கிடைத்து விட்டதோ? புனல் ஓடி வந்து புது வாழ்வளித்து விட்டதோ?

பேசாத வாய், புன்னகை அரும்பாத உதடு, கவர்ச்சி இல்லாத முகம், பூரிப்புத் தவழாத நெஞ்சம் எல்லாம் எங்கோ ஓடி மறைந்து விட்டனவே—அது ஏன்! ஊமையாய் கிடந்தவளுக்கு இந்த உற்சாகம் எப்படி வந்தது!

இரவு வெகு நேரம் வரை சற்குணு சாரளக் கம்பியை பிடித்துக் கொண்டே எதையோ கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்!

எல்லா வீடுகளிலும் தான் விளக்குகள் எரிகின்றன! ஆனல் எதிர் வீட்டு ஜன்னலில் தெரியும் அந்த விளக்கொளியில் என்ன மாய ஜாலத்தையை அவள் கண்டு விட்டாள்!

பாலைக் குடித்து ருசி பார்க்க வந்த பூனையை, வெளியில் படுத்திருந்த சொக்கம்மா "உஸ், உஸ்" என்று விரட்டிக் கொண்டிருந்தாள்!

சற்குணுவுக்கு ஒரே நடுக்கம், பயத்தால் உடல் முழுதும் வியர்த்து விட்டது! அடி மேல் அடி வைத்து, மெதுவாக வந்து படுக்கையில் படுத்துக் கொண்டாள்!

"என்ன சொக்கம்மா, என்னு அது?" சற்குணு சொக்கம்மாவை சோதிக்க ஆரம்பித்தாள்!

"ஒன்றுமில்லையம்மா! பூனை... பாலைக் குடிக்க வந்தது..."

"ஓகோ! சரி தான்—இன்னும் உனக்கு தூக்கம் வரவில்லையா?"

"மூட்டை பூச்சி தொந்திரவு சகிக்க முடியலையம்மா!"

"ஆமாம் சொக்கம்மா! இங்கே கூட அப்படித் தான்! தூக்கமே வரவில்லை!" சற்குணு பொய் சொல்லுகிருள் என்பதை சொக்கம்மா புரிந்து கொண்டு தான் இருப்பாள்! காரணம் அந்த வீட்டில் மருந்துக்குக் கூட மூட்டை பூச்சி கிடையாது!

"படுக்கையை தட்டி போட்டு படுத்துக்குங்க அம்மா!" சொக்கம்மா உபச்சாரத்திற்காக இதைச் சொல்லி வைத்தாள்!

"அதிருக்கட்டும் சொக்கம்மா! எதிர்த்த வீட்டில் புதுசா யாராவது குடி வந்திருக்காங்களா?" சற்குணு புலன் விசாரிக்கத் தொடங்கினுள்!

"ஆமாம், அம்மா! யாரோ ஒரு மொட்டை பய வந்திருக்கான்"! சொக்கம்மா கொஞ்சம் திமிரோடுதான் பதில் சொன்னுள்!

"அப்படின்னு, என்ன சொக்கம்மா!" சற்குணு ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டாள்!

"அப்படின்னு, குடும்பம் இல்லாத பசங்கன்னு பேரும்மா!" சற்குணுவுக்கு இந்த பதில் மிக்க மகிழ்ச்சியைத் தான் தந்திருக்கும்!

"ஏன் சொக்கம்மா, அந்த ஆளுக்குக் குடும்பம் இல்லை!" சற்குணு, சொக்கமாவின் வாயை கிளர ஆரம்பித்தாள்!

"காலிபசங்களுக்கு யாரம்மா பொண்ணு கொடுப்பா!"

"காலிபசங்களா? எப்படி சொக்கம்மா உனக்குத் தெரியும்?" சற்குணு கொஞ்சம் கவலையோடு தான் கேட்டாள்!

"பேரை பார்த்தாலே தெரியிலியா அம்மா!"

"அப்படி என்ன அதிசயமான பேரு சொக்கம்மா?"

"என்னமோ, உதயசூரியனும்!"

"பேரு நல்லா தானே இருக்கு சொக்கம்மா?" சற்குணுவின் உள்ளம் இன்பத்தின் எல்லைக்கே சென்று விட்டது!

"இருக்கும், இருக்கும்! உங்களுக்கு எல்லாம் நல்லா தான் இருக்கும்!" சொக்கம்மா கொஞ்சம் கிண்டலோடு தான் பதில் சொன்னுள்!

"அதிருக்கட்டும் சொக்கம்மா! ராத்திரி முழுதும் அங்கே விளக்கு எரியுதே ஏன்?"

"என்னமோ கதை எழுதுராரும்!"

"ஓகோ! எழுத்தாளரோ?"

"ஆமாம், ஆமாம்! சரி தான் தூங்குங்கோ அம்மா!" சொக்கம்மாள் குரட்டையே விட ஆரம்பித்து விட்டாள்!

உதய சூரியன்! ஆகா என்ன அற்புதமான பெயர்!

இந்தப் பெயரைக் கண்டு பிடித்த மேதை யாரோ, அந்த மேதையின் ஆற்றல், அறிவு எத்தகையதோ?

அவர் ஒரு எழுத்தாளராம்! அப்படியானல், சுரங்கத்தில், வெட்டி எடுக்கப்படாமலேயே மண்ணோடு மண்ணாய் கலந்து கிடக்கும் இந்தத் தங்கக் கட்டியின் பெருமையை அவர் நிச்சயமாக உணர்வார்! ஒளி மங்கி கிடக்கும் தங்கக் கட்டியைத் தோண்டி எடுப்பார், அதற்கு நல்ல ஒளியைத் தருவார்! மணியாக்கி, அணியாக்கி, நல்ல மாசற்ற பசும் பொன்னுக்கி மகிழ்வார்!

என் இதயவானில் இனி உதய சூரியன் தோன்றிடுவான்! இருண்டு கிடக்கும் என் வாழ்வில் இனி ஒளி வீசும்!

பெண்களின் பெருமையை அறிந்தவர்கள், பெண்களின் அருமையைத் தெரிந்தவர்கள், பெண்களின் மகிமையை உணர்ந்தவர்கள், பெண்களின் இன்ப சுகத்தைப் புரிந்தவர்கள்—பெண்களின் குணத்தை மதிப்பவர்கள், பெண்களின் பண்பை உணர்ந்தவர்கள் எழுத்தாளர்கள் மட்டுமே என்பதை உலகமறியாது!

நான் மட்டும் பாக்கியசாலி தான், கொடுத்து வைத்தவள் தான்! அந்த நாள், எந்த நாள்?

"கொக்கரக்கோ, கொக்கரக்கோ!" தூங்கிக் கிடந்த உலகத்தை சேவல் இப்படித் தட்டி எழுப்பிற்று!

கிழக்கு வானமும் வெளுக்க ஆரம்பித்தது! உதயசூரியனும் கொஞ்சம், கொஞ்சமாக தன் செங்கதிர்களைப் பரப்ப ஆரம்பித்தான்!

"இரவு, பகலாகி விட்டது—என் வாழ்விலும் அப்படித் தான்" என்ற நம்பிக்கையோடு படுக்கையை விட்டு எழுந்தாள் சற்குணு!

## 11

### உதயசூரியன்

**தோழர்களே! பெருமைக்குரிய பெரியோர்களே!**

**துடிக்கும் இதயங்களே! வெடிக்கும் எரி மலைகளே!**

**தீரர்களே! திராவிடப் பெருங்குடி மக்களே! இலட்சிய வேட்கைக் காட்டில் திரியும் இளஞ் சிங்கங்களே!**

வீரப்புதல்வர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களே! வீணர்களை விரட்டியடிக்கும் வீர மனம் படைத்த சகோதரிகளே!

நீங்கள் இலட்சம் இலட்சமாக இங்கே கூடி இருக்கிறீர்கள்! இலட்சியத்தில் நம்பிக்கை வைத்து நாட்டை விடுவிக்க இங்கே வந்திருக்கிறீர்கள்!

உங்கள் கண்களிலே ஒளியில்லை—ஆனால் வீரம் தேங்கிநிற்கிறது! உங்கள் உடலிலே சக்தி இல்லை—ஆனால் இனம் தெரியாத உறுதி உங்களை இரும்பு மனிதர்களாக்கி விட்டிருக்கிறது! நம்மை வெல்லுவாருண்டோ? நம்மை வீழ்த்துவாருண்டோ? இந்த வையகத்தில் எவரேனும் உண்டோ? இல்லை, இல்லை, நிச்சயமாக இல்லை!

ஆனால், உங்களை எத்தனை நாளைக்கு தான் இந்த கோலத்தில் காண்பது!

உண்ண உணவில்லாமல் வெறும் சக்கைகளாக இருக்கின்றீர்கள்! ஏன்? ஏன்? தோழர்களே, ஏன்? ஏன்?

தஞ்சை இருக்கிறது! அங்கே நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடுகிறது! ஆண்டு தோறும் விதைக்கிறார்கள், அறுக்கிறார்கள், செந்நெல் மணிகளை குவிக்கிறார்கள்! நீங்களோ சோறு, சோறு என்று தவிக்கிறீர்கள்! காரணமென்ன? தோழர்களே, காரணமென்ன? காலம கடத்தாது சிந்தியுங்கள்! எவருக்கும் கருணை காட்டாது சிந்தியுங்கள்!

பஞ்சாலைச் சங்கு ஊதுகிறது, பருத்த ஆடை நெய்யப்படுகிறது! தோழர்களே! எங்கே உங்களுக்குச் சொக்காய்? எங்கே உங்களுக்கொரு நாலு முழ வேஷ்டி!

சின்னான் பட்டி என்கிறார்கள், மதுரை என்கிறார்கள், கூறை நாட்டுச் சேலை புகழ் பெற்றது என்று புகழ் பாடுகிறார்கள்! எங்கே அந்தச் சேலைகள்? ஓடி மறைந்து விட்டனவா? உங்கள் உடலிலே கந்தலைத்தான், கிழிசலைத் தான் காண்கிறோம்! ஏன் இந்த நிலை!

நைலான் கட்டுகிறார்கள், ஆர்கண்டி, வெல்வெட், காஷ்மீர் என்று தேடுகிறார்கள்! அது நமக்கு வேண்டாம்! நைலான் நவநாகரீக நாரியமணிகளுக்கே சொந்தமாக இருக்கட்டும்! சீமான் வீட்டுச் சிங்காரிகளுக்கே அது சொந்தமாக இருக்கட்டும்!

தங்கம் விளைகிறது! உங்கள் கழுத்தில் ஒரு தாலிச் சரட்டை கூட காணோமே ஏன்?

மாடமாளிகைகள் இருக்கின்றன! கூட கோபுரங்கள் இருக்கின்றன! நீங்களோ நடுத்தெருவில் படுக்கிறீர்கள்? தூங்குகிறீர்கள்? என்ன காரணம்? இதற்கெல்லாம் யார் பொறுப்பாளி?

வெள்ளைக்காரன் மீது குற்றம் சாட்டி வந்தார்கள்!

"அவன் இந்த நாட்டைச் சுரண்டினான்—அந்நாட்டை கொழுக்க வைத்தான்" என்று பொலலாங்கு பேசினார்கள்!

"இனி எவருக்கும் அடிமையில்லை" என்ற நிலை வந்து பத்தாண்டுகளாகி விட்டன! என்ன சாதித்தார்கள்!

வறுமை, வறுமை—பஞ்சம், பஞ்சம்—பசி, பசி! இதற்கா ஒரு நாட்டிற்குச் சுதந்திரம்! இதற்காக தியாகம்! இதற்காக சிறைச்சாலை! இதற்காக ஒரு காந்தியார் தேவைப்பட்டார்!

உதயசூரியன் மேடையிலே எரிமலையைப் போல் வெடித்துக் கொண்டிருந்தான்! இடை இடையே மக்கள் கையொலி எழுப்பி ஆரவாரம் செய்து கொண்டிருந்தனர்! அந்த நேரத்தில் ஒரு பொடி பையன் ஒரு கேள்வித்தாளை கொடுக்கிறான்! உதயசூரியனுக்கு ஆத்திரம் பொங்கிற்று!

"உள்ளூர் சீமான் தனசேகரம்பிள்ளை ஏழைகளுக்கு பூதானம் செய்தார்—நீர் என்ன செய்திருக்கிறீர் என்று கூலிக்கு ஆள் பிடித்து இந்த கேள்வியை கேட்டிருக்கிறார்!

காங்கிரஸ்காரர்கள் பல்வேறு வழிகளைக்கையாண்டு இதுவரை உயிர் தப்பி வந்திருக்கிறார்கள்! வெள்ளைக்காரனைக் காட்டி. ஒரு இருபது வருடம், முப்பது வருடம் காலத்தைக் கடத்தினார்கள், காந்தியாரைக் காட்டி, அவருடைய கதராடையைக் காட்டி, அவருடைய எளிய வாழ்க்கையைக் காட்டி இது வரை ஜீவனம் நடத்தி வந்தார்கள்! அந்த சகாப்தம் முடிந்து விட்ட காரணத்தால் இன்று இந்த வழியில் மக்களை ஏமாற்றுகிறார்கள்!

தனசேகரம்பிள்ளையை ஒரு சிலர் புகழ்ந்து, புகழ்ந்து பூமாலை சூட்டுகிறார்கள்! நிலங்களை தானம் செய்து விட்டதாக சிலர் பெருமைக் கொள்ளுகிறார்கள்!

தனசேகரப்பிள்ளை செய்தது பூதானமா? யாருக்கு பூதானம் செய்தார்? ஏன் செய்தார்? எப்படி செய்தார் என்பதெல்லாம் ஊருக்கும், உங்களுக்கும் கொஞ்சமும் தெரிந்திருக்க நியாயமில்லை! இந்த சிதம்பர ரகசியம் கந்தப்பனுக்கு மட்டும் தான் தெரிந்திருக்க முடியும்!

இந்த சர்க்கார், இந்த காங்கிரஸ் சர்க்கார் நம்முடைய எதிர்ப்புகளை சமாளிக்கவும், நம்மிடம் பாசமும், நேசமும் கொண்டுள்ள மக்களை பிரிக்கவும் தான் நிலச் சீர்திருத்தம் என்ற ஒரு போலிச் சட்டத்தை, யாருக்கும். உழைப்பாளிகள் எவருக்கும் பயன் கிடைக்க முடியாத வகையில் கொண்டு வந்திருக்கின்றனர்!

தேர்தல்புரி யாத்திரையில் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற கையாளப் போகும் முறைகள், செய்யப் போகும் நிகழ்ச்சிகள் பலவுண்டு! அவற்றில் ஒன்று தான் இந்த நிலச் சீர்திருத்தமாகும்!

தனசேகரம்பிள்ளையின் வேலையாள் கந்தப்பனைக் கேட்டால் நிலச் சீர்திருத்தத்தின் ரகசியம் வெகு சுலபத்தில் அம்பலமாகி விடும்!

ஆத்தூர் ஜமீந்தார் தனசேகரம்பிள்ளை கந்தப்பனுக்கு நிலங்களை எழுதி வைத்திருக்கிறார்! எப்படி எழுதி வைத்திருக்கிறார் தெரியுமா? அந்த நிலப் பெறுமானத்தில் இரண்டு பங்கு அதிக தொகைக்கு எதிர்பாண்டு எழுதி வாங்கிக் கொண்டு நிலங்களை தானம் செய்திருக்கிறார்! பட்டா தான் கந்தப்பனுக்கு! அதன் பயனெல்லாம், அதன் விளைச்சலெல்லாம் தனசேகரம்பிள்ளைக்கு தான்! இதை அறியாத அப்பாவிகள் போற்றுகிறார்கள்! பாராட்டுகிறார்கள்!

காங்கிரஸ்காரர்கள் செய்யும் தேர்தல்புரியாத்திரையில் இது ஒரு கட்டம்! இனி பல கட்டங்கள் வரக்கூடும்! அதையெல்லாம் நாம் சமாளிக்க வேண்டும்!

நாடு வாழ, நாம் வாழ, நாட்டு மக்களெல்லாம் வாழ அவர்களை முறியடிக்க வேண்டும்! நாம் தேர்தலில் வெற்றி பெற்றால் தான் நாடு விடுதலையடையும்—நாமும், நாடும் வாழ முடியும்!

எனவே நமது பெரு மதிப்பிற்குரிய அண்ணா அவர்களின் அன்பு கட்டளைபடி உண்டியல் வைத்து, நம்முடைய தேர்தல் புரி யாத்திரையை வெற்றியாக்கித் தந்து, நாட்டை மீட்டுத் தர வேண்டுகிறோம்!

'உதய சூரியன் வாழ்க! உதய சூரியன் வாழ்க! எங்கள் ஓட்டு உதயசூரியனுக்கே' என்று விண்ணதிர மக்களெல்லாம் முழக்கம் செய்தனர்!

உதயசூரியன், சரியாக முப்பது வயதும் முற்றுப் பெறாத ஒரு இளைஞன்! இளைஞன் என்றால் ஈடு இணையற்ற இளைஞன்! தன்னுடைய நாவன்மையால் இந்த நாட்டையே ஒரு குடையின் கீழ் ஆட்சி புரியும் ஆற்றல் படைத்தவன்! அஞ்சா நெஞ்சன் அறிவின் சிகரம்! ஒப்பு உயர்வில்லாத எழுத்தாளன், ஈடு இணையில்லா பேச்சாளன்!

உதய சூரியன் பேசினால் இளைஞர் பட்டாளம் எழுச்சி பெற்று எழுந்து போர் முரசம் கொட்டும்! துள்ளி ஓடும் மான்களும், ஆடி மகிழும் மயில்களும், பாடிக் களிக்கும் குயில்களும், உதய சூரியனின் பேச்சைக் கேட்டால் உள்ளத்தை யெல்லாம் பறி கொடுத்து நிற்கத் தொடங்கி விடும்! தளர்ந்து போன நரம்பை அவனுடைய பேச்சு முறுக்கேற்றித் தரும்! தடியூன்றி தள்ளாடி நடக்கும் தாத்தாக்களும், தலைவெளுத்துப் போன கிழவர்களும் கொதித்தெழுவார்கள்!

உதய சூரியனுடைய பேச்சைக் கேட்க இலட்சம், இலட்சமாக மக்கள் திரண்டு வருவார்கள்! உதய சூரியனுடைய புகழ் பட்டி, தொட்டி எங்கும் பரவியிருந்தன! அவனுடைய படமில்லாத வீடில்லை, அவனுடைய புகழ் பரவாத ஊருமில்லை!

இத்தனைக்கும் எட்டடுக்கு மாளிகையில் பிறந்த சீமான் வீட்டுச் செல்வப்பிள்ளையில்லை! ஆனால் தோற்றத்திலே சீமான் போல் தான் காட்சி யளிப்பான்!

செக்கச் சிவந்த மேனி, சிரிப்புத் தவழும் முகம், சிந்தனை ஒளி வீசும் சிறுத்த கண்கள். அறிவின் முதிர்ச்சியைக் காட்டும் அகன்ற நெற்றி, அகந்தை இல்லா பார்வை, ஆனால் சிம்ம நோக்கு!

"எங்கோ ராஜா வீட்டில் பிறக்க வேண்டிய பையன் இங்கே வந்து பிறந்து விட்டான்" என்று அவனுடைய தாய் அடிக்கடி சொல்லி மகிழ்வாள்!

அந்த ஏழைக் கிழவிக்கு இவன் தான் பெரும் சொத்தாக இருந்தான்! இந்த அரும பெரும் சொத்தைக் காக்க அவள் பட்ட பாடு தான் எத்தனை!

இவனும் தாய் என்றால் எத்தனை இன்பம் பெறுவான் தெரியுமா? அவள் மீது உயிரையே வைத்திருந்தான்!

அவற்றை யெல்லாம் இன்று எண்ணிப் பார்த்தால் எல்லாம் கதை கதையாகத் தான் தெரியும்!

தாய் கூலி வேலை செய்ய இவன் படித்தான், பட்டம் பெற்றான்! ஆனால் ஏனோ பதவி மட்டும் எட்டியாகி விட்டது!

அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே, அந்த பிஞ்சு உள்ளத்திலேயே இந்த சமுதாயத்தைக் கண்டு குமுறுவான்! ஏற்றத் தாழ்வைக் கண்டு பதறுவான். "ஒரு பக்கத்திலே பசி, பசி—ஒரு பக்கத்திலே பால் பாயாசம்! அப்பப்பா, என்ன உலகமடா இது" என்று கதறுவான்!

தொட்டிலிலே அரும்பிய உணர்ச்சி, தொட்டிலிலே ஏற்பட்ட உணர்ச்சி தீ இன்று காட்டுத் தீயாகவே பரவி விட்டது! தன் வாழ்வையே நாட்டுக்குத் தத்தம் செய்து விட்டான்!

"விடுதலை—என் வாழ் நாளிலேயே விடுதலை" என்று சங்கநாதம் புரியத் தொடங்கி விட்டான்!

அந்த காட்டாற்று வெள்ளத்தை அணை போட்டாத் தடுக்க முடியும்?

(வளரும்)

# காங்கிரஸ் கலகம் செய்தே வளர்ந்தது

## காங்கிரசில் காந்தியாரைத் தவிர நல்லவர்கள் இருந்ததே இல்லை!

(டி. கே. சி பேச்சு)
(5ம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்தது. நிதியமைச்சருக்கு ஆள் கிடைக்காமல் சர். ஆர். கே. சண்முகத்தை இழுத்துப் போட்டுக் கொண்டார்கள். காஷ்மீர் பிரச்னையில் பேச ஐக்கிய நாட்டு சபைக்கு சர். ஏ. ராமசாமி முதலியாரை அனுப்பியதற்கு பின்னாலேதான் இவர்களுக்கு வெற்றி கிடைத்தது.

காங்கிரசில் ஒழுக்கமும், பண்பும் நிர்வாகத்திறமையும் படைத்தவர்கள் என்றும் இருந்ததில்லை காந்தியாரை ஒரு வியாபாரக் கருவியாக வைத்து வளர்ந்து வந்தார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தான் இன்று நம்மை குறை கூறுகிறார்கள். நம்முடைய தகுதி, திறமைகளைப் பற்றியும் தாக்கி வருகிறார்கள்.

அண்மையில் தஞ்சை மாவட்டத்தில் முதலமைச்சர் காமராசர் சுற்றுப் பயணம் செய்தபோது முன்னேற்றக் கழகம் நாட்டிற்கு என்ன செய்தது, என்ன செய்ய முடியும் என்று கேட்டிருக்கிறார்.

இன்று ஜனநாயக அமைப்பில் ஆளுகின்ற கட்சி, காரியயாற்றும் கட்சியாகவும், எதிர் கட்சி கேள்வி கேட்கும் கட்சியாகவும் தான் இருக்கும் "என்ன செய்தோம்" என்ற பட்டியல் தர வேண்டியது ஆளுகின்ற காமராஜரின் கடமை. ஏன் செய்யவில்லை என்று எடுத்துக் கூற வேண்டியது எதிர் கட்சித் தலைவராகிய அண்ணாவின் கடமை,

ஜனநாயகத்தின் அரிச்சுவடி கூட தெரியாத மனிதரைப் போல் எதிர்கட்சியாகிய நம் கழகத்தைப் பார்த்து என்ன செய்தது என்று ஆளும் கட்சியைச் சார்ந்த காமராஜர் கேள்வி கேட்கிறார், "சர்க்கார் உன் கையிலே இருக்கிறது, சட்டம் உன்கையிலே இருக்கிறது, கஜானா உன் கையிலே இருக்கிறது. போலீஸ் உன் கையில் இருக்கிறது. இவ்வளவையும் உன் கையில் வைத்துக் கொண்டு இதில் எதுவுமின்றி மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிற எங்கள் அண்ணாவைப் பார்த்து நீ ஏன் எதுவும் செய்யவில்லை என்று கேட்பது எப்படி பொருந்தும்

இது எதைக் காட்டுகிறது என்றால், திருமணம் ஆன ஒருவன், திருமணம் ஆகாத ஒருவனைப் பார்த்து நீ என்ன செய்தாய் என்று கேட்பது போல் இருக்கிறது.

திருமணம் ஆகி பதவி என்ற குடும்பத்தை நடத்தும் காமராசர், நமது அண்ணாவைப் பார்த்து நீ என்ன செய்தாய் என்று கேட்பது அரசியல் நாகரீக மற்ற செயலாகும்.

இவர்கள் தான் மக்களிடம் தாங்கள் மக்களுக்காகச் செய்ததை விளக்க வேண்டும். அதை விட்டு மேடைகளில் பண்பற்ற முறையில் பேசுவது ஒழுங்கான முறையாகாது.

நான் கேட்கிறேன் இவர்கள் 12 ஆண்டுகளில் நாட்டுக்கு என்ன செய்தார்கள். தங்களுடைய பெரிய சாதனை என்று காங்கிரஸ்காரர்கள் மார்தட்டிப் பேசுவது பக்ராநங்கல் அணைக்கட்டைப் பற்றி தான். நேரு அடிக்கடி "அது தான் என்னுடைய ஆலயம்" என்று பெருமைபோடு பேசுவார். அந்த அணைக்கட்டைக் கட்டி முடிப்பதற்கு ஒதுக்கப்பட்ட பணம் 75 கோடி ரூபாய் 1959-60க்குள் அணை முடிந்து விடும் என்று உறுதி கூறினார்கள், இதுவரை 170 கோடி ரூபாய் செலவாகி யிருக்கிறது. இன்னும் முடியவில்லை. அதற்குள் அணை இடிந்து பல உயிர்கள் சேதமடைந்தது.

இம்மாதிரி ஒழுங்கற்ற முறையிலும், ஊழல் நிறைந்த தன்மையிலும், நிர்வாகத்திறமையற்ற தன்மையிலும் நடைபெற்று வரும் ஒரு ஆட்சியிலிருக்கும் காங்கிரசார் பல சயவாசகளையும், குண்டர்களையும், ரௌடிகளையும் வைத்து நம்மை அழிக்கப் பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட செயல்களால் நாம் அழிந்து விடமாட்டோம்.

டில்லியில் தான் இவர்கள் நிர்வாகம் நாறுகின்றதென்றால்- நிர்வாக ஊழல் சந்தி சிரிக்கிறதென்றால் நம் மாநிலத்தில் தான் எல்லை வாழ்கிறது.

அடுத்தது தாமோதர் நதிப் பள்ளத் தாக்குத் திட்டம் அதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகை 79 கோடி ரூபாய். இதுவரை 130 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. இன்னும் முடிந்தபாடில்லை. அதற்குள் நீர் பட்டம் உயர்ந்து அணையின் ஒரு பாகம் இடிந்து ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய் நஷ்டத்தையும் உயிர்ச் சேதத்தையும் உண்டாக்கி விட்டது.

அடுத்தது ஹிராகுட் அணைக்கட்டு அதற்கு ஒதுக்கப்பட்ட பணம் 45 கோடி ரூபாய் இதுவரை 92 கோடி ரூபாய் செலவாகி யிருக்கிறது. இன்னும் முடிந்தபாடில்லை.

பரம்பிக்குளம் தண்ணீர் பரம்பிக்குளம் தண்ணீர் என்று பல ஆண்டுகளாக பஜனை பாடி வந்தார்கள். இன்னமும் அந்த பஜனை நடக்கிறதே தவிர பகவான் அருள் தந்த பாடில்லை அண்மையில் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த தோழர் கலியாண சுந்தரம் சட்ட மன்றத்தில் அமைச்சர் சுப்பிரமணியத்தைப் பார்த்து "பரம்பிக் குளம் தண்ணீர் விஷயம் என்ன வாயிற்று" என்று கேட்டார்.

அதற்கு நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நியாயமான முறையில் பதில் கூறாது, தன் வழக்கமான முறையைக் கையாண்டு கேலி செய்து, நையாண்டி செய்திருக்கிறார்.

"இந்த மாதிரி கேள்வி கேட்டு தமது கட்சிக்கு செல்வாக்கு பெறவும், அதை வைத்து அரசியல் பிரச்சாரம் செய்து கொள்ள நண்பர் நினைக்கிறார்,"

நம்பூதிரிபாட் இருந்திருந்தால் இது விரைவில் முடிந்திருக்குமென்றும், பட்டம் தாணுப்பிள்ளை இருப்பதால் முடியாதிருக்கிறது என்பதை மக்கள் நினைக்க வேண்டுமென்று திரு. கல்யாண சுந்தரம் நினைத்து இம்மாதிரி கேள்விகளைக் கேட்கிறார்" என்று கூறி மழுப்பி விட்டார்.

பின்னும் மக்களை ஏமாற்ற நிதியமைச்சர் பெருமிதத்தோடு கூறுகிறார்.

"நேருவை அழைத்து அதற்கு திறப்பு விழா வாற்றப் போகிறோம் என்று. ஏப்ரல் மாதத்தில் நேருவால் இங்கே வரமுடியாதென்றும் அதற்குக் காரணம் காமன் வெல்த் மகாநாட்டுக்கு அவர் போக வேண்டியிருக்கிறதென்று குறிப்பிட்டார். ஏப்ரல் மாதத்தில் முடியாதென்றால் மே மாதத்தில் வரலாமென்றால் அப்போது மழைக் காலம் தொடங்கி விடும் அவர் இங்கே வந்தும் பலனில்லை என்றும் சொன்னார். சரி; மார்ச்சு மாதத்தில் வைத்துக் கொண்டாலென்ன என்ற கேள்வியை அவரே எழுப்பிக் கொண்டு அதற்கு பதிலையும் சொன்னார்,

அப்போது தான் மலையாளத்தில்—கேரளத்தில் புதிய சர்க்கார் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர்கள் இன்னும் பைல்களையே படிக்கவில்லையென்றும் அதனால் அங்கு வர முடியவில்லை என்றும் சொன்னார். மார்ச்சிலே பைல் படிக்கவில்லை. ஏப்ரலில் நேருவுக்கு வேலை இருக்கிறது. மே மாதத்தில் மழை வந்து விடும். பிறகு எப்போது நடத்துவது என்றால் இந்த கேள்விக்கு பதிலே இல்லாது செய்து விட்டார். பட்டம் தாணுப்பிள்ளை அரசு இவர்களைப் பட்டம் பறக்க விட்டு விட்டது.

இதேபோன்றுதான் கிண்டிரேஸ் ஒழிக்கப்பட்ட வேண்டும் என்று இவர்கள் தான் சொன்னார்கள். அண்மையில் அமைச்சர் வெங்கட்ராமனைப் பார்த்து சட்ட மன்றத்தில் ஒரு உறுப்பினர் "கிண்டியில் நடக்கும் குதிரைப் பந்தயத்தை ஏன் நிறுத்தவில்லை' என்று கேள்வி கேட்டார். அதற்கு அவர் பதில் சொன்னார், சண்டை நடக்கிறதே தெரியுமா? அந்த சண்டைக்கு நல்ல குதிரைகள் தேவையாயிற்றே தெரியுமா? நல்ல குதிரைகள் கிண்டி ரேசில் தான் கிடைக்குமென்பது தெரியுமா? என்பது போன்ற கேள்விகளைத் தொடர்ந்து கேட்டு சண்டையை ஜெயிக்க நல்ல குதிரைகள் தேவை. நல்ல குதிரையை தேர்ந்தெடுக்க கிண்டிரேஸ் தேவை என்று முடித்தார். இத்தோடு அவர் முடித்துக் கொள்ளவில்லை; சண்டையில் நாம் தோற்றுப் போக வேண்டுமென்பவர்கள் தான் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று சொல்லுவார்கள் என்று கூறி கேள்வி கேட்ட தோழரையே தாக்கி மழுப்பி விட்டார்.

அடுத்தது உணவுப் பிரச்னை இதில் அவர்கள் எவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறார்கள் பாருங்கள் ஏறத்தாழ 12 ஆண்டுகளாக உணவு உற்பத்தியைப் பெருக்கப் போகிறோம் என்று பேசி வந்தார்கள் சைனா முறை என்றார்கள், ஜப்பான் முறை என்கிறார்கள், ஒவ்வொரு நாட்டு முறையாகச் சொல்லி வந்தார்கள். கடைசியில் எந்த முறையும் பயனளிக்காமல் அமெரிக்காவிலிருந்து 608 கோடி ரூபாய் செலவில் உணவு தானியங்களை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

நமது அண்ணா அவர்கள் நாட்டில் ஏற்பட்டிருக்கும் உணவுப் பற்றாக் குறையைப் போக்க அமெரிக்காவிலிருந்து உணவு தானியத்தை வரவழைக்க வேண்டுமென்று யோசனையைக் கூறினார். அதற்கு நிதி யமைச்சர் சுப்பிரமணியம் கிண்டலும் கேலியும் செய்து அமெரிக்காவில் அரிசி எங்கே இருக்கிறது இது கூட அறிஞருக்குத் தெரியவில்லையே என கூறினார்.

இதை வைத்துக் கொண்டு காங்கிரஸ் மேடைகளில் காங்கிரஸ் சில்லுண்டிப் பேச்சாளர்கள் நம்மையும், நமது அண்ணாவையும் தாக்கி வருகிறார்கள்.

"அரிசி எங்கே விளைகிறது. என்று தெரியாத இந்த அண்ணாதுரை அறிஞராம். இவருக்கு யார் அறிஞரென்று பட்டம் கொடுத்தார்கள்" என்று பேசுகிறார்கள்.

இவர்களுக்கு சொந்த அறிவும் கிடையாது, சொல்லுகின்ற அறிவையும் கேட்க மாட்டார்கள்,

பத்திரிகைகளைப் படிப்பதும் இல்லை. படித்தாலும் செய்திகளைப் புரிந்து கொள்வதும் இல்லை. புரிந்தவர்கள் சொல்வதையும் கேட்பதில்லை

ஐ. நா. சபையில் கேட்டு அரிசி வாங்குங்கள் என்று தான் அண்ணா கூறினார், அதைப் புரிந்து கொள்ளாது கேலி செய்கிறார்கள். செய்யட்டும்.

இன்னும் சிலர் தங்களை மிகுந்த அறிவாளிகள் என்று நினைத்துக் கொண்டு "இந்த அண்ணாதுரைக்கு யார் எம். ஏ. பட்டம் கொடுத்தார்கள்" என்று கேட்கிறார்கள்.

இவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் எம். ஏ. பட்டத்

(11ம் பக்கம் பார்க்க)

(சம்பத் பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு எஜமானர்களுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்து அவர்களிடம் நற்பெயர் எடுக்க—தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள நம்மை எதிர்க்க—அடக்க முனைந்து விட்டார்கள்.

பச்சைத் தமிழர் காமராசரும். அவருடைய சர்க்காரும் நம்மை எதிர்க்க ஜல்லடம் கட்டிப் புறப்பட்டு விட்டார்கள். அடக்கு முறையாலும் மிரட்டலாலும் அடக்கி விடலாம் என எண்ணுகிறார்கள் பார்க்கட்டும். அவர்களால் முடிந்ததைச் செய்யட்டும்.

நாம் யாரையும் எதிர் பார்த்தோ, எவரும் வருவார்கள் என்று தயங்கியோ நாம் காத்திருக்கவில்லை. அதை உத்தேசித்து தவணை கொடுத்து நாள் குறிப்பிடவில்லை. நமக்கு அந்த நிலையும் இல்லை. இன்றிரவு முடிவு செய்து நாளை போராட்டம் என்று கூறினால் விடிந்தால் போராட்டம் தான், அது எப்படி நடக்கும் என்ன விளையும் என்பதை நாமறிவோம்.

நாம் மிகவும் வலிமை மிக்க—மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு அரசியல் கட்சியாக இருக்கிறோம். அந்த அரசியல் கண்ணியத்தைக் கடைப்பிடித்தே நடந்திருக்கிறோம் போர் முறைப்படி—யுத்த தர்மப்படி நாம 90 நாள் தவணை தந்திருக்கிறோம். இது நமது அரசியல் நாகரீகத்தைக் காட்டவே செய்திருக்கிறோம்,

குடியரசு தலைவர் ராஜேந்திர பிரசாத் சோவியத்து நாட்டிற்குச் சென்றிருக்கிறார். செல்லட்டும்,

உல்லாசமாகக் அங்குள்ள காட்சிகளைப் பார்கட்டும் மாஸ்கோ நகரைச் சுற்றிப் பார்க்கட்டும். அங்குள்ள மீசியத்தை—கண் காட்சிகளைப் பார்க்கட்டும், அங்குள்ள மக்களின் நிலையை—உணர்ச்சிகளை பார்த்து வரட்டும், வந்த பின் நம் தீர்மானங்களை படித்துப் பார்க்கட்டும் இங்குள்ள நிலைமைகளை — இங்குள்ள மக்களின் உணர்ச்சிகளை தனது உளவாளிகளின், தனது எடுபிடிகளின் மூலம் அறிந்து கொள்ளட்டும். அதன் பின் ஒரு முடிவுக்கு வரட்டும்,

இதுவரை வாய் திறவாது மௌனமாகவும், தன்னையாரென்று காட்டிக் கொள்ளாமலும் இருந்த முதலமைச்சர் காமராசர் இப்போது தன்னையாரென்று காட்டிக் கொண்டு விட்டார். தன்னை அடையாளம் தெரியாமலிருந்தவர்களுக்கும் அடையாளம் தெரியும்படி நடந்து விட்டார்.

கொஞ்ச நாட்களுக்கு முன் தென்னகத்துக்கு வந்து இந்தி வெறிபிடித்து தென்னக மக்களின் விருப்பத்திற்கு மாறாக இந்தியில் பேசி, அவர்கள் தடுத்தும் மீறிப் பேசியதோடு பேசக் கூடாதென்று எதித்தவர்கள் மீது சோடா பாட்டில்களை எறிந்தும் தகாத முறையில் நடந்து கொண்ட ராம் மனோகர் லோகியா, தென்னகத்து மக்களின் எதிர்ப்பு சக்தியைக் கண்டு தாக்குப் பிடிக்காது இங்கிருந்து ஓடி ஹைதராபாத்துக்குப் போய் அறிக்கை விட்டிருக்கிறார். இங்கெல்லாம் வாய் மூடிக் கொண்டிருந்த அந்த பெரிய மனிதர். ஹைதராபாத்துக்குப் போய் வாய் திறந்திருக்கிறார்.

அவர் அந்தஅறிக்கையில் கூறுகிறார்.

“தமிழ் நாட்டில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள தமிழ் நாட்டினர், இந்தியாவின் பொது மொழியாகிய இந்தியில் பேச விடாது. என்னை அனுமதிக்காது குழப்பம் செய்தார்கள் ஒன்றல்ல—இரண்டல்ல மூன்றல்ல சென்ற இடங்களிலெல்லாம் என்னைப் பேச விடாது கல்லாலடித்து விரட்டியடித்தார்கள்.

இந்தச் செய்கையை ஆட்சியிலுள்ளவர்களும், பொது இயக்கத் தலைவர்களும் கண்டிக்கவில்லை. இதை உடனே தமிழகத்திலுள்ளோர் செய்ய வேண்டும், இதற்கு ஆட்சியிலுள்ளோர் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

அப்படி இல்லா விட்டால் மீண்டும் ஏழு நாட்களில் தமிழ் நாட்டிற்கு வந்து இந்தியில் பேசுவேன்” என்று லோகியா அறிக்கை விட்டதும், பச்சைத் தமிழர் காமராசர்-வாய் திறந்தும் பேசாதும், அறிக்கை விடாதும் இருந்த காமராசர் தொடை நடுங்கி நம்மைக் கண்டித்து அறிக்கை விட்டிருக்கிறார் நம்மை காலிகள் என்று கூறி விட்டார்.

ஒரு குப்பை லோகியா ஹைதராபாத்திலிருந்து விட்ட அறிக்கைக்கே பயந்துதொடை நடுங்கி அஸ்தியில் சுரம் வந்து அறிக்கை விட்டார் என்றால் இவருடைய வீரம், தன்மானம் எப்படிப்பட்டது. இவர் எந்த நிலையிலிருக்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

காமராசர் நம்மை மிரட்டுகிறார், நம்மை ஒழிக்கிறேன் என்கிறார். அவருக்கு நம்முடைய ஆற்றலை வீரத்தை காட்டியாக வேண்டும், உங்கள் எதிர்ப்பு சக்தி முன் காமராசர் படை பலம் ஒன்றும் செய்ய முடியாது.

இன்று இங்கு ஆட்சியிலுள்ள கருத்துக் குருடர்கள் கண் திறக்கும்படி நாம் செயலாற்ற வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய எந்தப் போராட்டமும் சொத்தையாகி விடவில்லை தோற்றுவிடவில்லை.

இந்தியப் பிரதமர் நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டினோம். ஆட்சியாளர்கள் எந்த வித அடக்குமுறை செய்தும் நேருவும், வடவர்களும் கண்டு பயப்படும்படி, அவர்கள் நம் ஆற்றலையும் வீரத்தையும் உணரும்படி செய்தோம்.

நேரு தமிழகத்து மக்களின் வீரத்தை. எதிர்ப்பு சக்தியை உணர்ந்தார். பயந்தார் அதன் பயனாக இந்தி விஷயமாக அரசியல் சட்டகதிற்கு விரோதமாக இரண்டு முறை வாக்களித்தார்.

இந்தி பேசாத மாநிலங்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாமல் இந்தியைப்புகுத்த மாட்டோம் இந்தி பேசுகின்ற மக்களின் அபிப்பிராயத்தைவிட பேசாதவர்களின் அபிப்பிராயத்தைத் தான் அறிந்து கொள்ள முற்படுவோம் என்று கூறினார்,

# சென்னை மந்திரிகள்

## விளைந்த நெல்லில் காணப்படும் பதர்கள் வெறும் கருக்காய்கள்!

இப்படி வாக்குறுதி தந்தது மைதானத்தில் அல்ல மக்கள் சபையில் உலக மக்களால் புகழப்படுபவர் என்று கூறிக் கொள்ளும் பண்டித நேருவால் கொடுக்கப்பட்டது வெறும் நேருவல்ல பிரதமர் நேருவே வாக்குறுதி கொடுத்தார்.

அந்த வாக்குறுதி மீறப்பட்டது. இந்தியைப் பொது மொழியாக ராஜேந்திர பிரசாத் உத்திரவிட்டு விட்டார்.

எல்லா இலாகாக்களிலும் இந்தியைப் புகுத்த துரிதமாக வேலை செய்து வரப்படுகிறது.

உள்நாட்டமைச்சர் பந்த் எல்லா அமைச்சர்களுக்கும் இந்தியைத் தீவிரமாக்க உத்திரவிட்டு விட்டார்.

இந்த நிலையில் நாம் என்ன செய்வது. கைகட்டிக் கொண்டு இருப்பதா நம்முடைய மாநில அமைச்சர்கள் முன்பு இந்தியை எதிர்த்தவர்கள் குடி அரசு தலைவர் அறிக்கை வந்ததும் சூடு. சொரணையற்ற சோற்றாலடித்த பிண்டங்களாக இருந்து வருகிறார்கள்,

நாம் இனி சோற்றை சுவை பார்ப்பவர்களாக— கோழைகளாக அடிமைகளாக இருக்கக் கூடாது. மனைவி, மக்கள் உற்றார் பெற்றோர் என்ற பாசத்தை விட நாட்டுப் பற்றுத்தான் மிகச் சிறந்தது நாட்டுப் பற்றுக்குப் பின் தான் வீட்டுப் பற்று அரசினர் செய்யும் அடக்குமுறைக்கோ, மிரட்டலுக்கு நாம் துவண்டு விடக் கூடாது.

ஆங்கிலம் நாங்கள் வேண்டுமென்று இப்போது கூறவில்லை. ஆங்கிலத்தை விட இந்தி ஆபத்தானது. நம்மை அடிமையாக்குவது என்று கருதுகிறோம்.

இந்தியில் அணு சக்தி இருக்கிறதா? விஞ்ஞானமிருக்கிறதா? எதைக் கொண்டு இந்தியை ஏற்றுக் கொள்வது?

இந்தி பேசுகின்றவர்கள் அதிகம் இருப்பதாக எண்ணிக் கொண்டு இந்திக்கு பலாத்காரமாக முடி சூட்ட நினைத்தால் தமிழகத்திலுள்ள 9 கோடி மக்கள் எந்த வித தியாகத்தைச் செய்தும் எந்தவித இன்னல்களை ஏற்றும் அதை எதிர்க்கத் தயாராக இருக்கிறோம்.

எங்களை அடக்கியோ, அடக்கு முறைகளைச் செய்தோ, இந்தியைப் புகுத்த நினைத்தால் அது முடியாது. தமிழ் நாட்டு மக்கள் எதற்கும் தயாராகி விட்டார்கள்.

வட நாட்டிலுள்ள இந்தி வெறியர்கள் எப்படியாவது தங்கள் மொழியை அதிகாரத்தில் அமர்த்த இங்குள்ள எத்தர்களை கொண்டு செய்ய எத்தனிக்கிறார்கள்.

அந்த மாதிரியான வட நாட்டுத் தருக்கர்களை விரட்டியடிக்க வேண்டும். அவர்கள் செய்யும் பித்தலாட்டங்களை, இழி செயல்களை அம்பலமாக்க வேண்டும்.

அந்த அரசியல் பேடிகளை இழுத்து வந்து நல்லதொரு பாடம் கற்பிக்க வேண்டும்.

நாம் எல்லாம் சிறிது நாட்களுக்கு நமது சுக துக்கங்களை மறந்திருக்க வேண்டும், சோற்று சுவையை மறந்திருக்க வேண்டும் உற்றார் உறவினர்கள். பெண்டு பிள்ளைகள் என்ற பாசத்தை மறக்க வேண்டும், உயிர் உள்ள வரை போர் நடையிலிருந்து பின் வாங்கக் கூடாது நடக்கும் சக்தி உள்ள வரை கீழே விழும்வரை பின் வாங்காது நடக்க வேண்டும். துப்பாக்கியைக் காட்டி மிரட்டுகிறார். படைகளைக் காட்டி பயமுறுத்துகிறார், அது துருப்பிடித்த துப்பாக்கிகள் அவைகளைக்கண்டு நமது கழகத்தார் பயப்பட மாட்டார்கள் அப்படிப்பட்ட பல துப்பாக்கிகளையும், கையாண்டவர்களையும். அவர்களடைந்த நிலைமையும் கழகத்தார் வரலாறுகளில் படித்திருக்கிறார்கள். அதைக் காட்டி மிரட்டுவார்கள். அஞ்சாதீர்கள் அடிப்பார்கள். அடக்குமுறையைக் கையாள்வார்கள் ஓடி விடாதீர்கள். துப்பாக்கியால் சுடப்பார்ப்பார்கள், அதை ஒரு முறை முறைத்து புன்னகை புரியுங்கள் துப்பாக்கி வளைந்துவிடும் நீங்கள் அடிபடுங்கள். மாள்வதற்குத் தயாராகுங்கள், மற்றவர்களை அடிக்காதீர்கள், அழிக்க எண்ணாதீர்கள். நம்முடைய தமிழர்களின் வீரத்தை-அவர்கள் வரலாறுகளை மறந்து விடாதீர்கள் களங்கம் ஏற்படுத்தாதீர்கள்.

நமது மந்திரிகள் நம்மை அடக்க பல சூழ்ச்சிகளை செய்வார்கள், அவர்களை நாம் துச்சமாக மதிக்க வேண்டும்.

இந்தப் போராட்டத்தில் நமக்கு வெற்றி தான். ஆனால், இன்று இருப்பவரில் எத்தனை பேர்கள் இருப்போம் என்று சொல்ல முடியாது வீட்டை விட நாடு தான் பெரிது தாய்மார்களிடம் நிலையை எடுத்துக் கூறி விடைபெறுங்கள்.

சமீபத்தில் இலங்கையிலிருந்து வந்த ஒரு ஆராய்ச்சியாளரிடம் பேசிக் கொண்டிருந்தேன் அவர் பரிசு பெற்றவர்.

நமது சேர, சோழ, பாண்டியர்களின் வரலாற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்து அவர்கள் மூவரும் ஒற்றுமையாக இருந்ததாகவும் வெளிநாடுகளுக்கு அனுப்பும் ஓலைகளில் மூவரும் ஒன்று சேர்ந்து முத்திரையிட்டே ஓலைகள் அனுப்பியதாகவும் கூறினார். அப்படிப்பட்ட வீரமரபில் தோன்றிய நாம், கோழைகள் என்று யாரும் எண்ணும்படி நடந்து கொள்ள வேண்டாம் தயாராகுங்கள்! தயாராகுங்கள்! புறப்படுங்கள்! நாள் நெருங்குகிறது. நமது நாட்டை அடிமை கொண்டிருக்கும் நயவஞ்சகர்களின் கொட்டத்தை தவிடு பொடியாக்கும் நாள் நெருங்கி விட்டது என்று கூறி விடை பெறுகிறேன்.

வணக்கம்.

# குமாரபாளையம் முடிவு கேட்டு பட்டணத்துப் பெண்களெல்லாம் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள்!

## கிராமத்து நங்கைகளெல்லாம் கும்மியடிக்கிறார்கள், குனிந்து குனிந்து கும்மியடிக்கிறார்கள்!

# சாகத்துணிந்தவர்கள் பலர்!

## சிறைச் செல்ல காத்து நிற்பவர்கள் மிகப் பலர்!

# நகரசபை உறுப்பினர்கள்

## மேயரோடுதான் சிறையில் இருப்பார்களாம்!

குமாரபாளையத்தில் கூடிய நமது பொதுக்குழு போர் முரசம் கொட்டி விட்டது! “இந்தி எங்களுக்குத் தேவையில்லை, திணித்தால் போராட்டம், போராட்டம்” என டெல்லிக்கு அறப்போர் ஓலை அனுப்பி விட்டது!

நீண்ட நெடுநாட்களாக, நித்தம், நித்தம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்தத் தித்திப்பான செய்தியைக் கேட்டு “இதோ ரத்தம், இதோ ரத்தம்” என இளைஞர்கள் புறப்பட்டு விட்டனர்!

நீண்ட நெடுநாட்களாக உறங்கிக்கொண்டிருந்த நெடுந்தோள்கள் விம்முகின்றன—ஆம், விம்முகின்றன!

நீண்ட நெடு நாட்களாகக் கட்டப்பட்டிருந்த கரங்கள், “எடுவாளை, கொடு கையில்” என்று கேட்டுக் கேட்டு, தாவித் தாவி அலுத்துப் போன கரங்கள் முஷ்டியைத் தூக்கி “வெற்றி, வெற்றி” என்று களிக்கின்றன!

‘எங்களுடையப் பிணங்களை தாலமுத்துவுக்குப் பக்கத்திலே தான் புதைக்க வேண்டும்” என்கிறார்கள் சிலர்!

“எங்களுடைய பிணங்களை நடராஜனுக்குப் பக்கத்திலே தான் எரிக்க வேண்டும்” என்கிறார்கள் பலர்!

எங்களுடைய பிணங்களை உடையார் பாளையத்திலே புதையுங்கள், எங்களுடைய பிணங்களை அஞ்சாநெஞ்சன அழகிரிசாமிக்குப் பக்கத்திலே புதையுங்கள்” என்கின்றனர் பலர்!

“ஐயோ, என் பிள்ளை மாரடைப்பால் செத்து விட்டானே—இன்னும் இரண்டு மாதம் இருந்திருந்தால் மொழியைக் காத்திட உயிரை விட்டிருப்பானே” என்று தவிக்கிறாள் ஒரு தமிழச்சி!

“நேற்று தானே என் மகன் ஜுரத்தால் இறந்தான்! இன்னும் இரண்டு மாதம் இருந்திருந்தால் இந்தியை ஒழித்துக் கட்டிவிட்டு செத்திருப்பானே! கொடுத்து வைக்க முடியாத பாவி நான்!” என்று ஒரு வீர மறத்தி புலம்புகிறாள்!

“நாளைக்கு எனக்குத் திருமணமாம்! நன்று, நன்று—இருவரும் களம் புகுவோம்—கருணையில்லா கொடுமையாளர்களால் செத்து மடிவோம்!” என்கிறான் ஒரு வாலிபன்!

“நாங்கள் அண்ணாவோடு சிறையில் வாடுவோம்” என்று மகிழ்கிறார்கள் பலர்!

“நாங்கள் சம்பத்தோடு கம்பிகளைப் பிடித்து நிற்போம்” என்று பூரிப்பும் பெருமையும் கொள்ளுகிறார்கள் சிலர்!

நாங்கள் நாவலரோடு போகிறோம் என்கிறார்கள்—நாங்கள் கருணாநிதியோடு போகிறோம் என்கிறார்கள்—நாங்கள் மதியழகனோடு போகிறோம், அன்பழகனோடு போகிறோம் என்கிறார்கள்!

“நகரசபை உறுப்பினர்களெல்லாம் மேயரோடு சிறையில் இருப்பது தான் நல்லது” என்று சிலர் எண்ணுகின்றார்கள்!

“எத்தனை மாதம்? ஆறு மாதங்களா? ஒரு வருடமா?” என்று பலர் புன்னகையோடு கேட்கிறார்கள்!

“திரும்பி வரும் போது இந்தி ஒழிந்திருக்கும், திராவிடம் பிரிந்திருக்கும்” என்று பெருமையோடு சிறைச்சாலையை வரவேற்கிறார்கள்!

“தேர்தல் வருகிறதே என்கிறார்கள் சிலர்—பரவாயில்லை அங்கிருந்தே வெல்லுவோம், ஆட்சியை கைப்பற்றுவோம்” என்று கூறுகிறார்கள் பலர்!

நேற்று முதலே ஒரே மகிழ்ச்சி நேற்று முதலே ஒரே குதூகலம்! தாங்காத மகிழ்ச்சியில் தமிழகமே மிதந்து களிப்படைகிறது! எங்கும் வண்ணத் தோரணங்கள்! எங்கும் களிப்பு நடனங்கள்!

பட்டணத்துப் பெண்களெல்லாம் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள்!

கிராமத்து நங்கைகளெல்லாம் கும்மியடிக்கிறார்கள்—குனிந்து, குனிந்து கும்மியடிக்கிறார்கள்!

“இந்தி ஒழிந்தது பெண்ணே, இந்தி ஒழிந்தது பெண்ணே! இன்பத் திராவிடம் வந்தது பெண்ணே, இன்பத் திராவிடம் வந்தது பெண்ணே!” என்று உழவர்களெல்லாம் வயல்களில் கீதமிசைக்கிறார்கள்!

“அப்போ, கஞ்சி கிடைக்கும் மச்சான், அப்போ, கஞ்சி கிடைக்கும் மச்சான்!” என்று கூலி வேலை செய்யும் பெண்களெல்லாம் பூரிப்போடு வேலை செய்கிறார்கள்!

குமாரபாளையம் முடிவு கேட்டு தமிழகம் இப்படி விழாக்கோலம் பூண்டு கிடக்கிறது!

இந்த நேரத்தில் ஆட்சியாளர்கள் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும்! தமிழகத்துக்கு இந்த நிலை ஏற்பட வேண்டுமா என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

இந்தி மொழி நமக்குத் தேவையற்ற மொழி! இந்தி மொழி திணிக்கப்பட்டால் நாம் அழிவோம், நமது நாடும், நமது மொழியும் ஒழிந்தே போய் விடும்!

இதை நமது அமைச்சர்கள் உணர வேண்டும்! உணர்ந்து மேலிடத்திற்கு அறிவிக்க வேண்டும்! இந்திய முடியரசுத் தலைவரிடம் முறையிட்டு எப்படியும் இந்தியை ஒழிக்கப்பாடுபட வேண்டும்!

எப்போதும் போல் கேலியும், கிண்டலும் செய்து விட்டு அலட்சியப் படுத்தும் பண்பான்மையை மந்திரிகள் கைவிட்டு காரியத்தில் இறங்க வேண்டும்!

இல்லாவிட்டால், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஆயுதங்களைத் தறித்து தமிழ் மறவர்கள் களம் அமைத்து விடுவார்கள்!

அமைச்சர்களே என்ன செய்யப் போகின்றீர்கள்!

முன்னேற்றக் கழகத்தின் சக்தியைப் பற்றி வடவர்களுக்கு சரிவர தெரிந்திருக்க நியாயமில்லை! தயவு செய்து எங்கள் சக்தியை குறைக்காமல் கூட்டாமல் உள்ள நிலையை எடுத்துச் சொல்லுங்கள்! நீங்கள் உண்மையைச் சொல்லி விட்டால் வடவர்கள் நிச்சயமாக ஒரு நல்ல முடிவுக்கு வந்து விடுவார்கள்!

பதவிக்காக, பெருமைக்காக போலி கௌரவத்திற்காக எங்களைப் பற்றி எங்களின் சக்தியைப்பற்றி குறைத்து சொல்லாதீர்கள்!

இன்னும் இரண்டு மாதங்களுக்கு மேல் கெடு இருக்கின்றன! அதற்குள் நல்ல முடிவை செய்து தமிழை தமிழ் நாட்டை, தமிழ் மக்களை வாழ வையுங்கள்! இந்த வேண்டுகோளை தயவு செய்து புறக்கணிக்காதீர்கள்! அப்படி புறக்கணித்து எங்களை அலட்சியம் செய்தால் போர் முரசம் எட்டுதிக்கும் ஒலிக்க ஆரம்பித்து விடும்! பின்னால் வருந்தி பயனில்லை! முன் யோசனை தான் மிக நல்லது, மிக நல்லது!

# பலாத்காரத்தால் கழகத்தை அழிக்க முடியாது !

## வம்புச் சண்டைக்குப் போகமாட்டோம் ! வந்த சண்டையை விடமாட்டோம் !

(டி. கே. சீ. பேச்சு)

(8ம் பக்கத் தொடர்ச்சி)

...ந்தை சைனபஜார் கடைகளில் விலைக்கு வாங்குவது என்று நினைத்துக் கொண்டார்கள் போலும். எம். ஏ. பட்டம் என்பது கல்லூரியில் படித்து சர்வகலாசாலையில் வழங்கும் பட்டம் என்பது இவர்களுக்குத் தெரியாது போலும். ஏன் என்றால் இவர்கள் சைனபசாரில் மூட்டைத் தூக்கியவர்கள் பிட்பாக்கெட் அடித்தவர்கள் ஆகவே இவர்களுக்கு சைன பஜார் வேலை தான் தெரியும்.

அண்ணாதுரைக்கு யார் அறிஞர் பட்டம் கொடுத்தது என்று கேட்கிறார்கள் ? யார் கொடுத்தால் உனக்கென்ன ? எங்கள் இஷ்டம் நாங்கள் அறிஞர் என்று அழைக்கிறோம். உனக்கு இஷ்டம் இருந்தால் கூப்பிடு. இல்லை என்றால் சைன பசார் வேலையைப் பாரு. காந்திக்கு மகாத்மா என்று பட்டம் சூட்டினாய்; வல்லபாய் பட்டேலை சர்தார் என்றழைத்தாய்; சி.ஆர். தாஸை தேசபந்த் என்றழைத்தாய், திலகரை லோக மான்ய திலகர் என்றழைத்தாய், சுபாஷ் சந்திரபோஸை நேதாஜி என்றழைத்தாய். வேதாரண்யத்தில் இருக்கும் வேதரத்தினம் சர்தார் என்று பட்டம் சூட்டிக் கொண்டார். சரோஜினிதேவிக்கு இந்தியாவின் கவிதைக் குயில் என்றழைத்தாய் இந்தப் பட்டங்களெல்லாம் அலிகார் சர்வகலாசாலையிலும் சென்னை சர்வகலாசாலையிலும் அளிக்கப்பட்ட பட்டம் என்று நினைத்துக் கொண்டாய், மக்கள் பார்த்து கொடுக்கக் கூடிய அன்புப் பட்டங்கள், அதுபோல் மக்கள் எங்கள் அண்ணாவை அன்பால் அறிஞர் என்று அழைக்கிறார்கள். நீங்களும் தான் பட்டம் சூட்டுகிறீர்கள். அந்தப் பட்டம் காலணாவுக்கு 2 விற்கிற பட்டம்; அது காற்றிலே பறந்து விடுகிறது,

காந்தியார் மதுவிலக்கை அமுல் நடத்த வேண்டுமென்று சொன்னார். மதுவிலக்குச் சட்டத்தில் திருவாங்கூரில் குடிக்கலாம்; மைசூரில் குடிக்கலாம்; டில்லியில் குடிக்கலாம். மீதி இடங்களில் குடிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் மது விலக்குச் சட்டமா? காந்தியார் டில்லியில் குடிக்கலாமென்று சொன்னாரா? காங்கிரஸ் அன்று முதல இன்று வரை பித்தலாட்ட காரியங்களில் ஈடுபட்டுத் தான் வந்திருக்கிறது.

நீ என்ன செய்தாய் என்று எதிர்கட்சிக்காரர்கள் கேட்டால் நம் அமைச்சர்கள் உச்சவரம்பு கொண்டு வந்து விட்டோம் என்று ஊளரிய ஓலமிட்டு வந்தார்கள். 15 ஆண்டு காலமாக நிலச் சீர்திருத்தம் அமுலாகும் என்று ஜம்பமாகப் பேசி வந்தார்கள். நீங்கள் 15 ஆண்டுகாலமாக அடித்த தம் பட்டத்தால் இப்போதுள்ள நிலச் சுவான்தார்கள் முன் ஜாக்ரதையுடன் தங்கள் நிலத்தை மனைவிக்கும், மகனுக்கும் மகளுக்கும் மைத்துணர்களுக்கும் மருமகனுக்கும் பங்கிட்டு எழுதி வைத்து விட்டு அரசாங்கத்திற்குப் பட்டாநாமம் சாத்தி விட்டார்கள், உச்சவரம்பு வருகிறது. உச்சவரம்பு வருகிறது நீங்களும் எச்சரிக்கையுடனிருந்து கொள்ளுங்கள் என்று அரசாங்கம் எச்சரிக்கை செய்து விட்டு, பின் உச்சவரம்பிற்குப் போனால் அங்கு என்ன கிடைக்கும்,

இதை எண்ணித் தான் நமது அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் உச்சவரம்பு பற்றிப் பேசும் போது " இது உச்சவரம்பல்ல இது மிச்ச வரம்பு என்று கூறினார்,

நம்முடைய அரசினர் உச்சவரம்பின் மீது எடுக்கும் நிலங்களை மீண்டும் மிராசுதாரர்களுக்கே குத்தகைக்குக் கொடுக்கப்படுகிறது. இது எப்படி இருக்கிறது என்றால் " கணவன் வீட்டிற்குப் போக வேண்டிய பெண்ணை புரோகிதன் வீட்டில் கொண்டு போய் வைப்பது போன்றதாகும்.

காங்கிரஸ்காரர்கள் நம்மைப் பார்த்து " நீங்கள் என்ன செய்தீர்கள் " என்று கேட்கிறார்கள் இன்று நாம் வளர்ந்திருப்பதைக் கண்டு வயிற்றெறிச்சல் பட்டு மேடைகளில் தரங்கெட்டு பேசி வருவதுடன், நீங்கள் என்ன செய்தீர்களென்றும் கேட்கிறார்கள்.

நாங்கள் என்ன செய்தோம் என்பதை நீ இன்று எங்கள் கழகம் இருக்கும் நிலையைச் சற்று எண்ணிப்பார், எங்கள் கூட்டங்களுக்கு மக்கள் திரண்டு வருவதைப் பார்த்துக் கேள். நாங்கள் எந்தவித வசதியும், எந்தவிதப் பிரச்சாரச் சாதனைகளும் இன்றி வளர்ந்திருக்கிறோம். எங்களுக்குப் பத்திரிகை பலமில்லை, பணபலமில்லை. எங்களுக்கிருப்பது ஓரிரண்டு தினசரி. குறைந்த எண்ணிக்கையுள்ளவார இதழ்கள் இவைகளை வைத்து நாங்கள் வளர்கிறோம்.

இன்று உங்களுக்கு பிரச்சார இயந்திரங்களாக செல்வாக்கு படைத்தை பல நாளிதழ்களும், வாய் கூசுகின்ற முறையில் எழுதிவரும் சில ஆபாச பத்திரிகைகளும் இருந்துங்கூட நீங்கள் அழிகிறீர்கள்.

இன்று எங்கள் பிரச்சாரம் மூலை முடுக்கெல்லாம் சந்து பொந்தெல்லாம், எங்கள் கொள்கைகள் எல்லா மக்களிடமும் புகுந்து வளர்பிறை போல் வளர்ந்து வருகிறது. இன்று எல்லா வட்டங்களிலும் நமது கிளைகள் உயர்ந்து வருகிறது, ஏராளமான அங்கத்தினர் சேர்ந்திருக்கிறார்கள். கழகம் சொல்லி வரும் கொள்கைகளை சிரமேற் தாங்கி செயலாற்ற ஏராளமான செம்மல்கள் கச்சையை வரிந்து கட்டி நிற்கிறார்கள்.

நமது பிரதமர் காமராசர் தஞ்சை மாவட்டத்தில் சூறாவளி சுற்றுப் பிரயாணம் செய்தார் அந்த தஞ்சை மாவட்டத்தில்நம்முடைய கழகம் முன்பு இருந்ததை விட இன்று நல்ல முறையில் இருந்து வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 800 கிளைகளுக்கு மேல் இன்று இருந்து வருகிறது. அது போன்று தமிழக மெங்கும் ஏராளமான கிளைக் கழகங்கள் ஏற்பட்டு பல லட்சக் கணக்கான உறுப்பினர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு இன்று மிகப் பொலிவோடு விளங்கி வருகிறது. இதைக் கண்டு காங்கிரசார் வயிற்றெறிச்சலடைந்து காலித்தனத்திலும் அக்கிரமச் செயலிலும் ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள். நம்முடைய கூட்டங்களில் கலகம் செய்யவும், நமது கழகத் தோழர்களை தாக்கவும், நமது கொடிகளைக் கொளுத்தவுமான செயலிலீடுபட முற்பட்டு விட்டார்கள்.

சமீபத்தில் புரசைவாக்கத்தில் நடந்திருக்கும் கலவரங்களைப் பார்த்தால் நமக்குப் பயங்கரத்தை உண்டாக்குகிறது. காங்கிரசார் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டு விட்டார்கள்.

கத்திகளையும், தடிகளையும் கையில் பிடித்து விட்டார்கள்.

கதர் சட்டையை அணிந்து, காலிகளும், ரௌடிகளும் இன்று புறப்பட்டு விட்டார்கள்.

நாம் என்றும் எவரிடமும் வம்புச் சண்டைக்குப் போகின்றவர்களல்ல. அதே நேரத்தில் வந்த சண்டைக்கு பயந்து ஓடுபவர்களலல.

நமது அண்ணா அவர்கள் நமக்குக் கண்யத்தையும், கடமையையும் போதித்து வருகிறார். நாம் பலாத்காரச் செயல்களில் ஈடுபடக் கூடாது. அஹிம்சையைக் கடை பிடிக்க வேண்டுமென்று அறிவுரை கூறிவருகிறார் அதை நாம் கடைபிடித்து வருகிறோம். அதனால் இன்று நாம் பல பிணங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த பயங்கர கொலைபாதகச் செயலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டத்திற்கும் நாம் வர வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்,

நம்முடைய கழகமோ, நாமோ இந்த மாதிரி ஈனச் செயல்களாலோ, பிணங்கள் விழுவதை கண்டோ பயந்து விடவில்லை, இதனால் நமது இலட்சியத்திலிருந்து சிறிதும் மாறிவிடவும் மாட்டோம் இதை போன்று பல இன்னல்களை ஏற்றிருக்கிறோம். பிணங்களைப் பார்த்திருக்கிறோம். அதனாலேயே வளர்ந்திருக்கிறோம்.

வருங்காலத்தில் நமக்கு பயங்கர ஆபத்துக்கள் வரவிருக்கிறது, அதைத் தடுத்து தற்காத்துக் கொள்ள நமது தோழர்கள் தயாராகிக் கொள்ளுங்கள்.

நமது தலைவர்கள் குமாரபாளையத்தில் கூடியிருக்கிறார்கள், இதை யெல்லாம் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள் அந்த முடிவின் படி நாம் நடந்து கொள்வோம்.

இன்று நமது முன் இருப்பது நமக்கு நீங்காக் கடமையாக இருப்பது இந்தி. அந்த இந்தி டில்லி அரசாங்கத்தின் ஆதரவில் நம் நாட்டில் நுழைந்து விட்டது. அதை நாம் நுழைய விடக் கூடாது. அது வந்தால் நம்முடைய நாட்டிற்கு நமக்கு அழிவைத் தான் தரும்.

எத்திக்கு நுழைந்து விடும் அந்த இந்தி எத்தனை பட்டாளங்களுடன் வரும் என்பதைத்தான் பார்க்க வேண்டும், எந்தக் கட்டத்திலும், எந்த ரூபத்திலும் இந்தி வந்தாலும் அதை எதிர்த்தே ஆக வேண்டும். அதனால் எப்படிப் பட்ட இன்னல்கள் வந்தாலும் அதை ஏற்கத் தயாராக இருக்க வேண்டும்.

நம்முடைய தலைவர்கள் நமக்கெல்லாம் போராட்ட அழைப்பை வெகு விரைவில் அனுப்புவார்கள். அந்த அழைப்பை ஏற்று போராட்டத்தில் குதிக்க வாரீர், வாரீர் ! என உங்களை அழைக்கிறேன் இந்தப்போராட்டம் நமது உரிமைப் போராட்டம், அதோடு இது இறுதிப் போராட்டம், நம்முடைய விடுதலைப் போராட்டம்,

போராட்ட முறை எப்படி இருக்குமென்று இப்போது கூற முடியாது, போராட்டம் நடைபெறுவது உறுதி. நமது நண்பர்கள் சம்பத் டில்லி ஆட்சி பீடத்திற்கெதிராக போராட்டம் நடத்தலாம். கருணாநிதி ரயில் சங்கிலியைப் பிடித்திழுத்து ரயிலை நிறுத்தலாம். கண்ணதாசன் மந்திரிகளின் கார்களை நிறுத்தி மறியல் செய்யலாம். எதுவானாலும் அதை செயலிலாற்றத் தயாராக இருங்கள். இன்னுயிரைக் கொடுத்தேனும் இலட்சியத்தை நிறைவேற்ற தயாராக இருங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

வணக்கம்

Registered as a News Paper in CEYLON
Regd. No.M. 7074 **MALAIMANI** விலை 16 காசு இலங்கையில் 20சதம் Phone 83285

# ஆயிரம் கோடி கேட்பவர் பண்டாரம் என்றால் ;
# இரண்டாயிரம் கோடி கேட்டவர் பரதேசியா ?

## நிதி அமைச்சர் பதில் சொல்லட்டும்!

பாடி வரும் வசை புராணங்களைத் தான் நமது நிதி அமைச்சரும் பாடி வருகிறார்! என்றாலும் இவரைப் போல் மற்ற அமைச்சர்கள் பெயரெடுக்க வில்லையே? காரணம் என்ன?

குதிரைக்கு நாலு கால்கள் என்றால் அதைப் பற்றி எவர் தான் கவலைப்படுவார்கள்! குதிரைக்கு காலும், வாலும், தலையும், கொம்பும் இரண்டு தான் என்றால் கொஞ்சம் அந்தப் பக்கத்தில் கவனத்தைச் செலுத்தத் தானே வேண்டி இருக்கிறது!

"முட்டையிடுவது பெட்டைக் கோழி அல்ல—சேவல் தான்" என்று துணிந்து, யாருக்கும் பயப்படாமல் நமது நிதி அமைச்சர் கூறுவார்! எனவே அந்த அதிசய மனிதரைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ள மக்கள் ஆசைப்படுகிறார்கள்!

"பெரிய மனிதர்களை எதிர்த்துப் பேசினால் ஊருக்கும், உலகுக்கும் தெரியும்" என்ற சித்தாந்தத்தைக் கொண்டவர், நமது நிதி அமைச்சர்!

எனவே தான் நமது அறிஞர் அண்ணா அவர்கள் எதைச் சொன்னாலும் அதை எதிர்த்தே வருகிறார்—எதிர்த்து வந்தாலும் பரவாயில்லை, அது தவறு என்றும் கூறுகிறார்! தவறு என்று கூறினாலும் பரவாயில்லை, அண்ணாவை அறியாதவா, தெரியாதவர் என்றும் கூறி வருகிறார்! அறியாதவர் என்று கூறினாலும் பரவாயில்லை—"அறிஞராமே, மேதையாமே, அண்ணாவாமே—இவருக்கு என்ன தெரியும், இவருக்கு என்ன தெரியும்" என்றும் பரிகாசமும் செய்து வருகிறார்!

இதற்கெல்லாம் காரணமென்ன? உண்மையிலேயே நமது அறிஞர் அண்ணாவின் ஆற்றல், திறன், சக்தி, பெருமை புகழ் எல்லாவற்றையுமே சுப்பிரமணியம் அறிந்திருக்கத் தான் செய்வார்! அந்த உண்மையை சொல்லி விட்டால் இவரின் புகழ் எப்படி பரவும்? இவரைப் பற்றி எவர் தான் நினைத்துப் பார்க்கப் போகின்றனர்!

அண்ணாவைத் திட்டினால்—"ஓகோ அண்ணாவையே திட்டுகிறார், அண்ணாவையே எதிர்க்கிறார், அண்ணாவையே கேலி செய்கிறார்—நம்ம அமைச்சருக்கு எத்தனை ஆற்றல், எத்தனை துணிவு" என்று உலகம் சொல்லும் அல்லவா? அதற்காகத் தான் நம்மை, நமது பேரறிஞரை கனம் சுப்பிரமணியம் வசைபாடுகிறார், "அறிஞர் ஏதும் அறியாதவர்" என்று கிண்டலும், நையாண்டியும் செய்கிறார்!

ஆனால், இந்த குறுக்கு வழி பாதை, நிலையானதல்ல, நீடித்தும் நிற்காது என்பதை கனம் அமைச்சரே இப்போது உணர்ந்து கொண்டு விட்டார்!

சிங்கம்தான் சிங்கமாக இருக்க முடியும்! புலி தான் புலியாக இருக்க முடியும்! அதே போல் மேதை தான் மேதையாக இருக்க முடியும், அறிஞர்கள் தான் அறிஞர்களாக இருக்க முடியும்!

நரிகள் சிங்கமாக நினைத்தால் முடியுமா? அந்த ஊளையிடும் புத்தி தான் போகுமா? நரி, சாயம் பூசிக் கொண்டு சிங்கமான கதை நாடறிந்த கதை தான்! அதே போல் மேதையாக வேஷம் அணிந்து கொண்டவர்கள், அறிஞராக மேக்கப் போட்டுக் கொண்டவர்கள் ஒரு நாள் மூச்சந்திக்கு வந்து தான் ஆக வேண்டும்!

அறிஞர் அண்ணா அவர்கள், தமிழ் நாடு வளம் பெற, தமிழ் நாட்டு மக்கள் அதனால் வாழ்வு பெற ஆயிரம் கோடி வேண்டும் என்று சொன்னார்!

உடனே நமது நிதி அமைச்சர் ஒரு பண்டாரம் கதை சொல்ல ஆரம்பித்தார்! "இரண்டு பண்டாரங்கள் வயிறு புடைக்க சாப்பிட்டு விட்டு வயல் வெளியில் படுத்து புறண்டு கொண்டிருந்தார்களாம்! அப்போது ஒரு பண்டாரம்" அந்த இடம் நமக்குச் சொந்தமாக இருந்தால் நாம் பிச்சை எடுக்க வேண்டியதில்லையே என்று சொன்னானாம்! அதற்கு இன்னொரு பண்டாரம் நினைப்பதிலும் பிச்சைக்கார புத்தி ஏன்? கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் நமக்கு சொந்தமாக இருக்க வேண்டும்" என்று சொன்னானாம்!

இந்த பண்டாரம் கதையை உதாரணம் சொல்லி "அதே போல் அண்ணாதுரை ஆயிரம் கோடி ரூபாய் கேட்கிறார்" என்று நமது நிதி அமைச்சர் கூறினார்!

"பெரிய பொருளாதார மேதையைப் போல் ஆயிரம் கோடி கேட்கிறாரே—அதை எப்படிச் செலவிட முடியும்? அந்தப் பெருந்தொகைக்கு எப்படி திட்டங்களைத் தீட்ட முடியும்" என்றெல்லாம் நமது நிதி அமைச்சர் அண்ணா மீது குற்றம் சாட்டினார்

அதை வைத்துக் கொண்டு—அண்ணாதுரை ஆயிரம் கோடி கேட்கிறார், அவர் தான் அறிஞராம், அவருக்கு திட்டங்கள் தீட்டும் ஆற்றலுண்டா "என்றெல்லாம், ஊர் ஊராகச் சென்று சொல்மாரி பொழிந்து வந்தார்! நாம் நகைத்தோம்! சிரித்தோம்! "ஐயோ பரிதாபமே! இவரா நமக்கு நிதி அமைச்சர்" என்று கவலையும் பட்டோம்!

ஆயிரம் கோடி நிதி அமைச்சருக்கு பெருந் தொகை தான், நிதி அமைச்சர் ஆளும் தமிழ் நாட்டிற்கு இது பெருந் தொகையல்ல என்பதை அறிய வேண்டும்!

தமிழகம் வாழ ஆயிரம் கோடி கூட போதாது "இரண்டாயிரம் கோடி வேண்டும்" என்று பொருளாதார மேதை திரு. லோகநாதன் அறிவித்திருக்கிறார்!

"ஆயிரம் கோடியா? இவரா அறிஞர்" என்று கேட்ட நிதி அமைச்சர் திருவாளர் லோகநாதனைப்பற்றி என்ன நினைக்கிறார்? இவரும் பொருளாதாரம் புரியாதவரா? திட்டங்களைத் தீட்ட முடியாதவரா? ஆற்றலற்றவரா? அறிவு மழுங்கியவரா? நிதி அமைச்சர் அவர்களே! தங்கள் திருவாயைத் திறந்து முத்து, முத்தான பொன் மொழிகளை கொஞ்சம் உதிர்த்து தான் பாருங்களேன்!

ஆயிரம் கோடியை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்" என்று அண்ணாவை கேட்ட நிதி அமைச்சர்—"இரண்டாயிரம் கோடியை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்" என்று திருவாளர் லோகநாதனைக் கேட்பாரா? தயவு செய்து கொஞ்சம் கேட்டு தான் பாருங்களேன்!

ஆயிரம் கோடி கேட்ட எங்கள் அண்ணா பண்டாரம் என்றால்—இரண்டாயிர கோடி கேட்ட திரு. லோகநாதன் பரதேசியா? பொருளாதாரப் புலியே! அறிவுலக மேதையே பதில் சொல்லுங்கள்!

இந்த அண்ணாதுரைக்கு பொருளாதாரம் தெரியுமா என்று நிதி அமைச்சர் கேட்டார்!

"இந்த நிதி அமைச்சருக்கு மட்டும் பொருளாதாரம் தெரியுமா" என்று மேதை லோகநாதன் இன்று கேட்கிறார்!

சாயம் பூசிய மேதையின் சாயத்தை யெல்லாம் திருவாளர் லோகநாதன் வெளுக்க வைத்து—"இவர் யார்" என்பதை பொது மக்களுக்குக் காட்டி விட்டார்!

"ஆயிரம் கோடியா?" என்று ஆர்ப்பாட்டம் செய்தவர், சிங்கம் போல் கர்ஜித்தவர் எங்கே? சிறு நரி போல பதுங்கி, பதுங்கி ஒளிவது ஏன்?

வீருப்புப் பேசியவருடைய முகம் கருக்குது, மூஞ்சி சுளுக்குது உடல் வெளுக்குது உள்ளம் பதறுது, தலை தொங்குது! ஐயோ, பாவம்! ஐயோ, பாவம் இனியேனும் எங்கள் அண்ணாவை புரிந்து கொள்ளுங்கள்!

புரிந்து கொள்ளாமல், மேதையைப் போல் பேசினால் இந்த பரிதாபம் தான் நடைபெறும்!

## பெருகும் ! பெருகும் !
## நந்தனார் வந்தால்
## பெருகும் ! பெருகும் !

முதலமைச்சர் கனம் காமராஜர், வயல்களில் உற்பத்தியை இரண்டு பங்காக பெருக்க வேண்டும் என்று கூறி இருக்கிறார் !

பட்டிணத்தில், பங்களா வாசம் புரிந்து கொண்டு, சுகபோகங்களை அனுபவிக்கும் சீமான்களுக்காக உற்பத்தியை பெருக்க வேண்டுமா ? இதைச் செய்ய உழவர்களுக்கு என்ன தலைவிதி?

கோழி கூவும் நேரத்தில் எழுந்து, பகலெல்லாம் இரத்த வியர்வையை சிந்தி கோட்டான் கத்தும் நேரத்தில் வீடு திரும்பும் பாட்டாளி இதுவரை கண்ட சுகம் தான் என்ன? உற்பத்தியை ஏன் பெருக்க வேண்டும் ? எதற்காக பெருக்க வேண்டும் ?
வயல்களில் பாடுபடுவதைவிட சென்னைக்கு வந்து ரிக்ஷா வண்டி இழுத்தால் கூட ஓரளவு பயன் கிடைக்குமே" என்று எல்லோருமே எண்ணத் தொடங்கி விட்டார்கள்!

இனி உற்பத்தியை பெருக்க வேண்டுமானால் நந்தனார் தான் வரவேண்டும் ! ஒரு வேளை இந்த காலத்தில் வரும் நந்தனார் தில்லை நடேசனை நம்பாதவராக இருந்து விட்டால் ?

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு. சென்னை-14.